1994

மங்கள வைபவங்களுக்கு
ஏற்ற பட்டுப் புடைவைகள்
மற்றும் சகல விதமான
ரெடிமேற் வகைகளுக்கு
RASI
ராசி சில்க்ஸ்

பக்கங்கள்: ஆறு
Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 5-00

★ காஞ்சிபுரம்
★ ரெயின் போ பெனாரிஸ்
★ டபிள் செத் பீஸ் பெனாரிஸ்
★ மைசூர் சில்க்ஸ்
★ காயத்திரி சில்க்ஸ்
★ பட்டு வேட்டிகள்
மற்றும் சகல விதமான
பட்டுப் புடைவைகளுக்கும்
ராசி சில்க்ஸ்
70, 71A, நவீன சந்தை,
(உட்புறம்) யாழ்ப்பாணம்.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 பங்குனி 19 வெள்ளிக்கிழமை (01-04-1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 125

யுத்தத்தை தீவிரப்படுத்தும் திட்டத்தை அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டிய கட்டாயம்!

மூடப்பட்டிருக்கும்

யாழ்ப்பாணம், ஏப். 1

அனுமதி வழங்கும் செயலகங்களும், குடும்பப் பதிவு அட்டைச் செயலகங்களும், மோட்டார் ஊர்திப் பதிவுச் செயலகமும் இன்று திறக்கப்படமாட்டா என்பதைப் பொதுமக்களின் கவனத்திற்கு போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவினர் அறிவித்துள்ளனர். (உ)

குளிரூட்டப்பட்ட கப்பலில் 16 பயணிகள் வந்தனர்

கொழும்பில் சிகிச்சை பெற்றுத் திரும்பும் நோயாளர்கள் உட்பட 16 பயணிகளை திருமலையில் வைத்து ஏற்றிக்கொண்டு "பிளாம் பயான்" கப்பல் நேற்று பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்தது.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழுவின் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இக்கப்பல் குளிரூட்டப்பட்ட வசதியுடையது.

கொழும்புக்குச் சிகிச்சைக்குச் செல்லும் 18 பயணிகள் இக்கப்பலில் நேற்று பருத்தித்துறையிலிருந்து திருமலைக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

இக்கப்பலில் ஒரு தடவையில் இருபது பயணிகள் மட்டுமே செல்ல முடியும் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-8-15-87-173)

இனி வாராந்தம் தபால் கொழும்பிலிருந்து வரும்!

யாழ்ப்பாணம், ஏப். 1

குடாநாட்டுக்கான தபால் பொதிகளை வாராந்தம் எடுத்து வர ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழுவின் ஏற்பாட்டில் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ள, — திருமலைக்கும், பருத்தித்துறைக்கும் இடையிலான — வாராந்த கப்பல் சேவையின் போது தபால் பொதிகளும் எடுத்துவர ஏற்பாடாகியுள்ளதாக செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு யாழ். வதிவிடப் பிரதிநிதி திரு. செற்றிக் பிரலா தெரிவித்தார்.

வாராந்தம் புதன்கிழமை திருகோணமலையில் இருந்து புறப்படும் "பிளாம்பயான்" கப்பல் அடுத்த நாள் பருத்தித்துறைக்கு வந்து சேரும்.

இக்கப்பலில் 20 நோயாளர்கள் மட்டும் அழைத்து வரப்படுவர் என்றும் —

யாழ். மாவட்டத்தில் உள்ள அவசர தேவைக்கான பொருள்கள் குறிப்பாக மருந்துப் பொருள்கள் மற்றும் தபால் பொதிகள் ஆகியனவும் அதில் எடுத்து வரப்படும் என்றும் — அவர் மேலும் தெரிவித்தார். (உ-8)

திருக்கோவிலில் 3 படையினர் பலி!

கொழும்பு, ஏப். 1

அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவில் தாளையடி வட்டை காட்டுப்பகுதியில் கடந்த சனிக்கிழமை காலை ரோந்து சென்ற படையினர் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் 3 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். 4 பேர் காயமடைந்தனர்.

அதையடுத்த அப்பகுதிக்கு விரைந்த மேலதிக படையினர் அன்று பகல் முழுவதும் தேடுதல் வேட்டையை நடத்தினர்.

திருக்கோயில் தாளையடி உடை. சஞ்சிகுடிச்சாறு, காஞ்சிரம் குடா பகுதிகளிலேயே இத்தேடுதல் இடம்பெற்றது.

கவச வாகனங்கள் சகிதம் தேடுதலை நடத்திய படையினருக்கு விமானப் படையினரும் உதவி புரிந்தனர்.

அப்பகுதியில் பெரும் வெடிச்சத்தங்கள் கேட்டவண்ணம் இருந்ததாக மட்டக்களப்பில் இருந்து கொழும்புக்கு கிடைத்த தகவல்களை மேற்கோள்காட்டி கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (உ-3)

தென்மாகாணத்தில்

பாதுகாப்புக்கு மத்தியில் தொடங்கொட பதவியேற்பு

கொழும்பு, ஏப். 1

தென்மாகாண முதலமைச்சராக எதிரணியைச் சேர்ந்த அமரசிறி தொடங்கொட நேற்று முற்பகல் பதவியேற்றார்.

காலி கோட்டையில் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் தென்மாகாண ஆளுநர் டாக்டர் எம். எம். ஜயரத்னா முன்னிலையில் பதவியேற்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியைப் பார்ப்பதற்காக 25 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் அதிகாலை முதல் காலி கோட்டைப் பகுதியில் திரண்டிருந்தனர்.

இதனால் அப்பகுதியில் கலவரங்கள் ஏற்படக்கூடும் என அஞ்சப்பட்டது; அதனைத் தொடர்ந்து பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது.

பதவியேற்பு வைபவத்தில் மேல்மாகாண முதலமைச்சர் சந்திரிகா குமாரணதுங்காவும்

(5 ஆம் பக்கம் பார்க்க)

கிழக்கு தொண்டர் நிறுவனம் அரசின் விசாரணையில்!

கொழும்பு, ஏப். 01

அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்களின் நடவடிக்கைகளை உன்னிப்பாகக் கண்காணிக்கும்படி ஜனாதிபதி உத்தரவிட்டிருக்கிறார்.

அண்மையில் ஜெனிவாவில் நடைபெற்ற ஐ. நா. மனித உரிமை ஆணைக்குழுக் கூட்டத்தில் கொழும்பு அரசுக்கு எதிராக குறிப்பிட்ட அரச சார்பற்ற தொண்டர் நிறுவனம் ஒன்றின்மூலம் ஈழத் தமிழ்க் குழுக்கள் எடுத்த முயற்சியைத் தொடர்ந்தே, இந்தக் கண்காணிப்புக்கு அரசு உத்தரவிட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐ. நா. மனித உரிமை ஆணைக்குழுக் கூட்டத்தில் ஈழத் தமிழ்க் குழுக்களுக்கு ஆதரவாக நடந்து கொண்டதாகக் கூறப்படும் கிழக்கு மாகாணத்தை மையமாகக் கொண்டு இயங்கும் அரச சார்பற்ற தொண்டர் நிறுவனம் ஒன்றின் நடவடிக்கை

(5 ஆம் பக்கம் பார்க்க)

தெற்கு தேர்தல் தோல்வியால் எழுந்துள்ள இக்கட்டுநிலை

கொழும்பு, ஏப்ரல் 1

தென் மாகாணசபைத் தேர்தலில் ஆளும் ஐ.தே.கவுக்கு ஏற்பட்ட படுதோல்வி, வடக்கு – கிழக்கு யுத்தத்தை தீவிரமாக முன்னெடுத்துச் செல்லவும், சர்வசன வாக்கெடுப்பை நடத்தி, வடக்கு – கிழக்கு இணைப்பைப் பிரிக்கவும் அரசாங்க மேலிடம் எடுத்திருந்த தீர்மானங்களை ஒத்திப்போடும் நிலைக்குத் தள்ளிவைத்துள்ளது.

தமிழ், சிங்கள அரசியல் வட்டாரங்களில் இவ்வாறு அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டிருப்பதாக கொழும்புத் தமிழ்ச் செய்திப் பத்திரிகை ஒன்று தகவல் வெளியிட்டிருக்கிறது.

தேர்தல் முடிவை அடுத்து அரசு தனது திட்டங்கள் குறித்து மறுபரிசீலனை செய்யும் நிலை ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது

இது தேர்தல் ஆண்டு. இன்னும் எட்டு மாதங்களுக்குள் ஜனாதிபதித் தேர்தலும், நாடாளுமன்றத் தேர்தலும் நடக்கப்போகின்றன

தென்மாகாணத்தில் படுதோல்வியுற்ற ஆளும் கட்சி இந்த 8 மாத காலத்துக்குள்

(6 ஆம் பக்கம் பார்க்க)

நோர்வே உயரதிகாரியின் யாழ். விஜயமும் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 1

நாளை யாழ்ப்பாணம் வரவிருந்த—நோர்வே வெளிவிவகார அமைச்சைச் சேர்ந்த உயர் அதிகாரியான— திரு. ஆர்னே பிஜோர்ட் ரோப்ஸ் தமது விஜயத்தை பின் போட்டுள்ளதாக தெரியவந்தது.

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் மத்தியில் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு நோர்வே அரசாங்கம் மேற்கொண்ட முயற்சி தொடர்பாக இவர் யாழ்ப்பாணம் வந்து பேச்சுகள் நடத்தவிருந்தார்.

நாளை மேற்கொள்ளவிருந்த தமது விஜயத்தை அவர் பின்போட்டுள்ளதாகவும்—

அதற்கான காரணம் தெரியவரவில்லை என்றும் — விடயமறிந்த வட்டாரங்கள் நேற்று மாலை தெரிவித்தன.

இதேசமயம்—

சபாநாயகர் முஹம்மது இன்று ஆரம்பிக்கவிருந்த யாழ். விஜயமும் ஒத்திவைக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருப்பது தெரிந்ததே. (உ-8)

இன்று விழிப்பாக இருங்கள்!

வாசகர்களே!

மனப் பதற்றத்தையும், ஏமாற்றத்தையும் தரும் பல சங்கதிகளும், செய்திகளும் இன்று உங்களை நாடி வரும்! தேடி வந்து சொல்வார்கள்.

உங்கள் உறவினர்கள், உற்ற நண்பர்கள் கூட இந்த வேண்டாத விஷப் பரீட்சையில் ஈடுபடுவார்கள்.

அவர்களுக்கு அது நகைச்சுவைச் செயற்பாடாக இருக்கலாம். ஆனால் நீங்கள் அல்லவா முட்டாள்களாகவும், ஏமாளிகளாகவும் ஆக நேரிடும்?

ஆம். இன்று விழிப்பாக இருங்கள்! ஏப்ரல் முட்டாள் தினம் என்பதனை நினைவில் கொள்ளுங்கள்!

ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஏப். 1

பலாலி இராணுவ முகாமில் இருந்து நேற்று முன்தினம் இரவும் நேற்றுப்பகலும் வலிகாமம் மேற்கு, வலிகாமம் வடக்கு பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. (உ-8-13-15)

முச்சந்தி முரளி



அப்ப ... உவர் டிங்கிரி [illegible] சங்கு நிலையிலை [illegible] சொல்லுங்கோ......!

உரையாற்ற முடியாத நிலையில்

சட்டசபையைப் பகிஷ்கரிக்க தமிழக காங்கிரஸ் முடிவு

சென்னை, ஏப். 1

தமிழக சட்ட சபையில் சுதந்திரமாக, அச்சமின்றி ஜனநாயக முறையில் இயங்கும் சூழ்நிலை உருவாகும் வரை சட்டசபை நடவடிக்கைகளில் இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்கள் பங்கேற்கப் போவதில்லை என எதிர்க்கட்சித்தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் அறிவித்துள்ளார்.

பாலசுப்பிரமணியம் தலைமையில் காங்கிரஸ் உறுப்பினர்கள் குழு ஒன்று நேற்று மாநில ஆளுநர் டாக்டர் சென்னா ரெட்டியைச் சந்தித்து சட்டசபை நடவடிக்கைகளைப் பகிஷ்கரிக்கும் முடிவைத் தெரிவித்தது.

ஆளும் அ.தி.மு.க உறுப்பினர்களினால் சட்டசபையில் இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்கள் பேசமுடியாத நிலை ஏற்பட்டிருப்பதாகவும் ஆளுநரிடம் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

நடமாட்டம் இல்லை என்றால்

புலிகள் மீதான தடையை நீடிக்க 'ஜெ' கோருவது ஏன்?

வாழப்பாடி எழுப்பும் கேள்வி

சென்னை, ஏப். 1

தமிழகத்தில் விடுதலைப் புலிகளின் நடமாட்டம் இல்லை என்று கூறும் முதலமைச்சர் ஜெயலலிதா, விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீதான தடையை நீடிக்க வேண்டும் என்று மத்திய அரசைக் கோருவதன் காரணம் என்ன?

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வாழப்பாடி இராமமூர்த்தி முன்கண்டவாறு செய்தியாளர்கள் மத்தியில் பேசியபோது கேள்வி எழுப்பினார்.

ஆங்கிலவார இதழ் ஒன்றில் வந்த ஆதாரமற்ற செய்தி ஒன்றின் அடிப்படையில், முதலமைச்சரும் மாநில அமைச்சர்களும் காங்கிரஸ் அரசையும் பிரதமரையும் சட்டசபை [illegible] வர் என்றும் அவர் தெரிவித்தார்.

புலிகள் இயக்கத்தின்மீதான தடை நீடிக்கப்பட வேண்டும் என்று கோரும் பிரேரணை ஒன்றை அவர் தமிழக சட்டசபையில் முன்மொழிந்து அதனை அங்கு நிறைவேற்றுவாரா என்றும் இராமமூர்த்தி கேள்வி எழுப்பினார். (உ-எ-க)

விமானங்கள் அடிக்கடி வட்டமிட்டன

யாழ்ப்பாணம், ஏப். 1

நேற்றுப் பகல் குடாநாட்டின் பல பகுதிகளிலும் 'அவ்ரோ' மற்றும் 'புக்காரா' விமானங்கள் அடிக்கடி வட்டமிட்டு நோட்டமிட்டதாக பல பகுதிகளிலிருந்தும் செய்தியாளர்கள் அறிவித்துள்ளனர்.

இதனால் குடாநாட்டில் பதற்றம் காணப்பட்டது. (உ-13-15-17-30 45-51-161)

தெற்கு தேர்தல் தோல்வியின் பின்னர்

ஐ.தே. கவின் முக்கியமான கூட்டங்கள் இவ்வாரத்தில்!

கொழும்பு, ஏப். 1

ஆளும் ஐக்கியதேசியக் கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் இம்மாதம் நான்காம் திகதியும் செயற்குழுக் கூட்டம் இம்மாதம் 5 ஆம் திகதியும் நடைபெறவிருக்கின்றன.

தென் மாகாணசபைத் தேர்தலில் ஆளும் கட்சி தோல்வியடைந்த பின்னர், முதல் தடவையாக நடைபெறும் இவ்விரு கூட்டங்களும் கட்சியின் எதிர்காலத்தைப் பொறுத்தவரை முக்கியத்துவம் வாய்ந்தவையாக இருக்கும் என்று கட்சியின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இவ்வருட இறுதியில் நடைபெறவிருக்கும் ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களை ஐக்கிய தேசியக் கட்சி எவ்வகையில் முகம் கொடுக்க வேண்டும் என்பது குறித்து முக்கிய முடிவுகள் இவ்விரு கூட்டங்களிலும் எடுக்கப்படக்கூடும் என்றும் அப்பேச்சாளர் தெரிவித்தார். (உ-எ-6)

ஸ்ரீலங்கா விமானப்படை நவீனமாக்கப்படுகிறதாம்

கொழும்பு, ஏப். 1

விமானப்படையை நவீனமயப்படுத்தும் நடவடிக்கைகளில் புதிய விமானப்படைத் தளபதி ஏயார் மார்ஷல் ஒலிவர் ரணசிங்கா தலைமையிலான அதிகாரிகள் ஈடுபட்டுள்ளதாக கொழும்பு பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவித்திருக்கிறது.

ரஷ்யாவில் இருந்து கொள்வனவு செய்த எம் ஐ 8 ரக நவீன விமானங்கள் அடுத்த மாதத்தில் இலங்கைக்கு வந்து சேரும் என்றும் —

வடபகுதி மீதான இராணுவ நடவடிக்கையில் விமானப் படையின் பங்கு முக்கியமானது என்பதால் விமானப் படையை நவீனமயப்படுத்துவதில் பாதுகாப்பு அமைச்சின் கவனம் திரும்பியுள்ளது என்றும் — அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

வெளிநாடுகளில் இருந்து கொள்வனவு செய்யப்படும்,

(5 ஆம் பக்கம் பார்க்க)

அஷ்ரப் பதவி துறப்பு, அறிவிப்பு 4 ஆம் திகதி

கொழும்பு, ஏப் 01

அடுத்த மாதம் 4 ஆம் திகதி நாடாளுமன்றம் கூடும் போது, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். எம் அஷ்ரப் தமது எம். பி. பதவியை ராஜினாமாச் செய்யும் முடிவை அறிவிக்க நேரம் ஒதுக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

சபாநாயகர் எம். எச். முஹம்மது தலைமையில் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் கலந்து கொள்ளும் கூட்டம் அன்றைய தினம் காலையில் நடைபெறவுள்ளது. அக்கூட்டத்தில் இராஜினாமா பேச்சை நிகழ்த்த 5 நிமிட நேரம் ஒதுக்கப்பட வேண்டும் என்ற ஜனாப் அஷ்ரப் விடுத்த கோரிக்கை ஆராயப் படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையில் இம்மாதம் முதலாம் திகதியில் இருந்து தமது சம்பளம் மற்றும் அலவன்ஸ்களைத் தாம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

மீனவருக்கான நிவாரணம் நிறுத்தப்படுவதாகத் தகவல்

யாழ்ப்பாணம், ஏப். 1

ஸ்ரீலங்கா அரசு அறிவித்துள்ளபடி மார்ச் முதலாம் திகதியில் இருந்து கடற்றொழிலாளருக்கான உலர் உணவு நிவாரணம் நிறுத்தப்பட்டு விட்டதாக யாழ். செயலகப் புனர்வாழ்வுப் பிரிவு அறிவித்துள்ளது.

பெப்ரவரி 23 ஆம் திகதியிடப்பட்ட ஸ்ரீலங்கா அரசின் சுற்றுநிருபத்தில் —

மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், திருகோணமலை மாவட்டங்களில் உள்ள— மீனவர்களுக்கான — நிவாரண உதவிகளை மார்ச் முதலாம் திகதியுடன் நிறுத்தும் படியும்—

இந்த மாவட்டங்களில் கடல் வலய தடைச்சட்டம் நீக்கப்பட்டுள்ளதாகவும் —

இது குறித்து பாதுகாப்பு அமைச்சு மற்றும் கடற்படைத் தளபதியுடன் கலந்துரையாடப்பட்டு இந்த முடிவு எடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

எனவே இச்சுற்று நிருபத்தின்படி பெப்ரவரி மாதத்துக்கான உலர் உணவு நிவாரணம் மட்டுமே கடற்றொழிலாளருக்கு வழங்கி முடிக்கப்படும் என்றும் —

மார்ச் முதலாம் திகதிக்குப் பின்னரான காலத்துக்கு நிவாரணம் வழங்கப்படமாட்

(5 ஆம் பக்கம் பார்க்க)

பல்கலை. விஞ்ஞான பீட பரீட்சை முடிவில் அதிருப்தி

யாழ்ப்பாணம், ஏப். 1

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தில் பௌதிக விஞ்ஞானத்துறை முதலாம், 2 ஆம் வருட மாணவர்கள் தமது பரீட்சை முடிவு குறித்து அதிருப்தி அடைந்திருப்பதாகத் தெரியவருகிறது.

நேற்று மாணவர் பிரதிநிதிகள் விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் எஸ். மகேஸ்வரனைச் சந்தித்து தமது அதிருப்தியைத் தெரிவித்தனர்.

பரீட்சை நடத்தும் முறையால் மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும்—

40 வீதமான மாணவர்கள் மட்டுமே சித்தியடைந்துள்ளதாகவும்— மாணவர்கள் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

எட்டுக் கோரிக்கை அடங்கிய மகஜர் ஒன்றையும் அவர்கள் சமர்ப்பித்தனர்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

சில வசதிகள் கருதி

அறிவுக்களஞ்சியம் -22

28-04-1994இல் வரும். தயவுசெய்து காத்திருங்கள்

(சி/7468)

எண்ணக் கடலின் நடுவினிலே
முகிழ்த்து நிற்கும்

31ஆம் நாள் நினைவலைகள்

உதயம்:
18
—
01
—
1992

உதிர்வு
பவம்:
02
—
03
—
1994

அரும்பிலேயே வாடி விட்ட அழகுமலர்

செல்வி குஜேந்தினி சந்திரா அவர்கள்

தனது வளர்ச்சியின் முக்கிய பங்குதாரரும் கிராம அலுவலருமாகிய திரு. கு. சந்திரா அவர்களது

அருமைப் புதல்வி

செல்வி குஜேந்தினி சந்திரா அவர்களது

திடீர் மறைவு குறித்து
இறுப்பிட்டி சனசமூக நிலையம்
இரத்தக் கண்ணீர் வடிக்கின்றது!

"கன்னியங் கடமை சமநீதி
கருணை கொண்ட தாயவளாய்
மண்ணில் உயர்ந்து வாழ்தலைவன்
மாசில்லாத சந்திரனின்
எண்ணம் போல பிறந்தவளே!
இனிய மலரே! குஜேந்தினியே!
அண்ணல் இறைவன் திருத்தாளில்
அம்மா! சாந்தி நீ பெறுக!!"

ஈடு செய்ய முடியாத இழப்பினை அடைந்திருக்கும் திரு. சந்திரா அவர்கட்கும் அவரது குடும்பத்தினருக்கும் மேற்படி நிலையம் தனது கண்ணீர் கலந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றது.

ஓம் சாந்தி!

இறுப்பிட்டி சனசமூக நிலையம்,
புங்குடுதீவு -

[30189]

நாளை நடப்பவை

பாடசாலைகளில்

சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அதிபர் வ. கயிலேஸ்வரன் தலைமையில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். (க-117)

இலங்கை சாரணர் சங்கத்தின் — பருத்தித்துறை, கிளிநொச்சி மாவட்ட கிளைச் சங்கங்களைச் சேர்ந்த — அவத்தை II குருளைச் சாரணர் தலைவர், சாரணர் தலைவர் பரீட்சையை முடித்தவர்களுக்கான அவத்தை III கருத்தரங்கு நாளை சனிக்கிழமை காலை 8-30 மணிக்கு கைதடி நவீலட் பாடசாலையில் நடைபெறும். (த-31)

★ ★ ★

புலிகளின் குரல் வானொலிக் கலைஞர்களுக்கான மாதாந்த கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூரில் நடைபெறும். (த)

★ ★ ★

அராலி வடக்கு மாதர் அபிவிருத்தி சங்கம் ஏற்பாடு செய்துள்ள தையல் கைப்பணி பொருட்காட்சி நாளை சனி பிற்பகல் 2 மணிக்கு அராலி வடக்கு கந்தசாமி கோவில் அருகில் நடைபெறும். (த-161)

★ ★ ★

''மாற்றம்'' சஞ்சிகை நடத்தும் மூதறிஞர் க.சி. குலரத்தினம் நினைவுரைக் கூட்டம் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலயத்தில் இயங்கும் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் நடைபெறும். (க)

பரீட்சை நிலயங்கள் மாற்றம்

யாழ்ப்பாணம், ஏப். 1

நாளை யாழ். மாவட்டத்தில் நடைபெறும் இரு பரீட்சைகளுக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் அமைக்கப்படவிருந்த பரீட்சை நிலையங்கள் வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டிருப்பதாக யாழ். தெற்கு கல்வி வலய பணிப்பாளர் அறிவித்திருக்கிறார்.

மக்கள் வங்கிக்குச் சுருக்கெழுத்தாளர்களைச் சேர்ப்பதற்கான பரீட்சைக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் தோற்றுமாறு அறிவுறுத்தப்பட்ட பரீட்சார்த்திகள் திருக்குடும்ப கன்னியர்மடத்துக்கும்—

நடுநிலை தொழில்நுட்ப அலுவலர்களைச் சேர்ப்பதற்கான பரீட்சைக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் தோற்ற அறிவுறுத்தப்பட்ட பரீட்சார்த்திகள் யாழ். இந்துக் கல்லூரிக்கும் சமுகம் தரும்படி கேட்கப்பட்டுள்ளது. (உ-162)

WANTED

UDUVIL GIRLS COLLEGE

Wanted Teachers of English to teach English in the middle and upper school.

Qualification: Graduates or Graduands with English as a subject. English Trd. Retired teachers too may apply.

★ Please apply before 15th April 1994

PRINCIPAL,
UDUVIL GIRLS' COLLEGE

(சி7649)

கண்ணீர் அஞ்சலி

கொழும்பு, உதவி சுங்க பணிப்பாளர்

திரு. கணநாதலிங்கம் அவர்களின் அன்புமனைவி

திருமதி தனலக்சுமி கணநாதலிங்கம்

29 3-94 இல் கொழும்பில் சிவபதம் அடைந்தார். பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யாழ் சுங்க இலாகா ஊழியர்கள்

(30178)

கண்ணீர் அஞ்சலி

திரு. செல்லத்துரை சிவபாலன்

(வட பிராந்திய அலுவலகம் - கொழும்பு)

அவர்களின் மரணச் செய்தி கேட்டு ஆழ்ந்த கவலை அடைந்திருக்கும் நாம் எமது கண்ணீர் அஞ்சலிகளை அன்னாரிற்கு செலுத்துகிறோம்.

பிரதான முகாமையாளர்
ஊழியர்
இலங்கைவங்கி யாழ் மேற்தரக்கிளை

(30179)

கிறிஸ்து உயிர்த்தெழுந்த திருநாள் பஜனை

தென் இந்திய திருச்சபை யாழ்ப்பாணத் திருமண்டலம் நடத்தும் ஈஸ்டர் பஜனை, ஈஸ்டர் ஞாயிற்றுக்கிழமை 03-04-1994 அன்று மாலை 4-30 மணிக்கு உடுவில் மகளிர் கல்லூரி திறந்தவெளியரங்கில் நடைபெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்

இயக்குநர்
சமயக் கல்விக்குழு
தென் இந்தியத் திருச்சபை

(7049)

G.A.Q. 95 பேராதனை

- ★ A/L இல் 3 பாடங்கள் சித்தியுடன் 180 புள்ளிகளைப் பெற்றவர்கள் மட்டும் மேற்கூறப்பட்ட பாடநெறிக்கு விண்ணப்பிக்கலாம்.
- ★ இதற்கான விண்ணப்ப படிவங்கள், விபரங்கள் யாவற்றையும் நேரில் பெற்றுக் கொள்ளலாம்.
- ★ விண்ணப்ப முடிவு திகதி நீடிக்கப்பட்டுள்ளது.
- ★ விரிவுரைகள் ஆரம்பமாகி விட்டன.

விபரங்களுக்கு:-

S. அருள்தங்கை

புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(சி/7470)

வட்டுக்கோட்டை

இந்து வாலிபர் சங்கம்

நடத்திய

அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு முடிவுகள்

(28-03-94 இல் நடைபெற்றது.)

1 ஆம் பரிசு இலக்கம்:- 1207
2 ஆம் பரிசு இலக்கம்:- 2150
3 ஆம் பரிசு இலக்கம்:- 2919

ஆறுதல் பரிசு இலக்கம்:-

2738 1565 1426 1520
2062 2860 1382

இந்து வாலிபர் சங்கம்
வட்டுக்கோட்டை.

(30182)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் நடத்தும்

உற்பத்தி எழுச்சி வாரம் - 1994

◎ உற்பத்திக்கு ஒரு விழா
◎ உற்பத்தித் திறனுக்கு உன்னத பரிசில்கள்
◎ உற்பத்தியாளருக்கு திருவிழா
◎ ஆண்டு தோறும் தொடர்வது இவ்வாண்டும் நிகழ்கிறது

காலம்: 1994 சித்திரை 24 ஆம் நாள் முதல் 30 ஆம் நாள் வரை

(அ) விவசாயம்

1, உழவுப் போட்டி
2, கொத்துதல் போட்டி
(ஆண்/பெண் இருபாலாரும் கலந்து கொள்ளலாம்)
3, உபஉணவுப் பயிர்ச்செய்கைப் போட்டி
(அவரையினம் / எண்ணெயினம்)
4 உற்பத்தி எழுச்சி வார பொது அறிவுப்போட்டி
(மாணவர் / உழைப்போர்)

(ஆ) விலங்கு வேளாண்மை தொழில் போட்டிகள்

1. நல்லினக் காளை 3, முயல் வளர்ப்பு 5 நல்லின மறி
2, நல்லினப் பசு 4, நல்லினக் கடா 6, தாரா வளர்ப்பு

(இ) கைத்தொழில்

1. சிறுகைத் தொழில் போட்டிகள்

(ஈ) சக்தியை பயன்படுத்தல்

1, புதிய கண்டுபிடிப்புகள்

(உ) மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி

(ஊ) பனை தென்னை வள அபிவிருத்தி தொடர்பான போட்டிகள்

1 நீர் இறைக்கும் பட்டை இழைத்தல்
2, குட்டான் இழைத்தல்
3, கிடுகு பின்னுதல்
4. பனை மரம் ஏறுதல்
5. கூடிய பதனீர் உற்பத்தியாளர் தெரிவுப் போட்டி

(எ) கடல் வளம் தொடர்பான போட்டிகள்

1. நீச்சல் போட்டிகள் 3. துடுப்பு வலித்தல்
2, பாய் மரம் கட்டுதல் 4. வலை பின்னுதல்

(ஏ) புதிய உணவு அறிமுகப் போட்டிகள்

(ஐ) கிராமிய பொதுசன அமைப்புகளுக்கிடையிலான போட்டிகள்

1, வீதி திருத்துதல் 3, குளம் புனரமைப்பு
2, வாய்க்கால் திருத்துதல்

✲ மேற்படி விதிகளையும் விணணப்பப் படிவங்களையும் உங்கள் பகுதி கிராமிய உற்பத்திக் குழுக்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.

● **விண்ணப்ப முடிவு திகதி: 15 - 04 - 1994**

விண்ணப்பப் படிவங்களை உங்கள் பகுதி கிராமிய உற்பத்திக் குழுக்களிடமும், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் மாவட்ட, கோட்ட, வட்டப் பணிமனையிலும் ஒப்படைக்கலாம்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்,
தமிழீழ விடுதலைப் புலிகள்.

(சி-7645)

புதிய தமிழ் அரசியல் கட்சி
தெற்கில் விரைவில் உதயம்?

புத்திஜீவிகள் தீவிர முயற்சி

கொழும்பு, ஏப். 1

புதியதொரு தமிழ் அரசியல் கட்சி ஒன்றை அமைத்து எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடுவதற்கான முயற்சியில் தமிழ் கல்விமான்கள், புத்திஜீவிகள், சமூகசேவை மற்றும் மத அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஈடுபட்டிருப்பதாக நம்பகமாகத் தெரிய வருகிறது.

கொழும்பு தமிழ்த் தினசரி ஒன்று இவ்வாறு செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக ஆராய்வதற்காக கொழும்பில் அந்தரங்கமாகக் கூட்டப்பட்ட கூட்டம் ஒன்றில் புதிய அரசியல் கட்சியை அமைப்பதற்கான முன்னேற்பாட்டு ஒழுங்குகளை செய்வதற்கென செயலூக்கக் குழு ஒன்றும் நியமிக்கப்பட்டிருக்கிறது.

உத்தேச புதிய கட்சியின் நோக்கம் குறுகிய அரசியல் மற்றும் குழுவாத நோக்கங்களுக்கு அப்பாற்பட்டது என்றும்—

நாடளாவிய ரீதியில் சிறுபான்மையின மக்கள் — குறிப்பாக தமிழ் பேசும்மக்கள் எதிர் நோக்கும் அவல நிலைக்கு பரிகாரம்காண்பதே அதன் இலட்சியம் என்றும் அம் முயற்சியில் ஈடுபட்டுள்ள வட்டாரங்கள் தெரிவித்தன.

இன்றிருக்கும் பழம்பெரும் தமிழ் அரசியல் தலைவர்களை அடுத்த பொதுத் தேர்தலில் ஒரேபட்டியலின் கீழ் போட்டியிட வைப்பதற்கான அழுத்தத்தைக் கொடுத்து இலங்கை அரசியலில் சிறுபான்மையினங்களின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதும் இந்தப் புதிய கட்சி ஏற்பாட்டாளர்களின் ஒரு நோக்கமாக இருக்கிறது.

நாடு இன்று எதிர் நோக்கும் பிரதான பிரச்சினையின் தாரதம்மியங்களை தெளிவுபட விளக்கி விரிவான அறிக்கை ஒன்றை இந்த ஏற்பாட்டாளர்கள் விரைவில் விடுக்கவிருப்பதாகவும் நம்பகமாகத் தெரியவருகிறது.

அண்மைக் காலமாக நாட்டின் அரசியல் தலைமைத்துவம் நாடு எதிர்நோக்கும் பிரதான பிரச்சினை குறித்து வெளியிட்டுவரும் வியாக்கியானங்கள் ஏற்படுத்திய பாதிப்பே இந்தப் புதியகட்சி உருவாக்கப்படுவதற்கான முயற்சியில் அவர்களை ஈடுபட வைத்தது என்றும் அந்த வட்டாரங்கள் கூறின.

இவ்வாறு அந்தப் பத்திரிகைச் செய்தியில் மேலும் விவரிக்கப்பட்டுள்ளது.

[த-5]

"மாற்றம்" வெளி வருகிறது

தமிழ்த்தாய் மன்றத்தின் "மாற்றம்" காலாண்டு மக்கள் சஞ்சிகையின் தை—பங்குனி இதழ் இன்று முதலாம் திகதி வெளிவருகிறது.

[எ]

அன்னை பூபதி நினைவு சிரமதானம்

அன்னை பூபதி நினைவாக நடைபெறும் சிரமதானத்தில் இன்று கொடிகாமம் கச்சாய் கோடிக்காடு இடம் பெயர்ந்தோர் முகாம் துப்புரவு செய்யப்படும்.

(எ)

சேவை நலன் பாராட்டு விழா

சாவகச்சேரி நுணாவில் மேற்குப் பகுதி மக்களால் சாவகச்சேரி நகரசபை விசேட ஆணையாளராகக் கடமையாற்றி இளைப்பாறிய திரு. த. நவரத்தினராசாவின் சேவைநலன் பாராட்டு விழாவும் புதிய விசேட ஆணையாளராக பொறுப்பேற்றுள்ள திரு. கி. நடராசாவுக்கு வரவேற்பு விழாவும் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு நகரசபை பொதுநூல்நிலைய நுணாவில் மேற்குக்கிளை முன்றிலில் நடத்தப்படவுள்ளன.

(ச-117)

நெல் விலை வீழ்ச்சி

யாழ்பாணம். ஏப். 01

பூநகரியில் நெல்லின் விலை பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. தற்சமயம் ஒரு மூடை நெல்லு 400 ரூபாவாக விற்கப்படுகின்றது

(க-17)

31ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில்:
08 — 12 — 1939

●

ஆண்டவன் அணைப்பில்:
02 — 03 — 1994

திருமதி ஆறுமுகம் பார்வதிதேவி

(ஓய்வு பெற்ற யாழ். போதனா வைத்தியசாலை ஊழியர்)

இராமு மாணிக்கம் பெற்றெடுத்த அரும்பயனாம்
பாரினிலே வந்துதித்த பார்வதியாய்
பொதுநலமே தன்நலமாய் எண்ணி வாழ்ந்து
பூமியிலே நின் புகழ் நாட்டிவிட்டாயம்மா
ஆற்றாத் துயர்க் கடலில் எம்மை மூழ்கவிட்டு
காற்றோடு கலந்திட்ட காரணமென்ன?
பாசத்தைப் பொழிந்து பண்பைப் போதித்ததாலே
நேசமுடன் நின்நிழலே தேடி அலைகின்றோம்
என்றும் எம் இதயங்களில் -
வாழ்ந்துகொண்டேயிருக்கும்.
எம் மாதாவின் ஆத்மா சாந்தியடைய -
பிரார்த்திக்கிறோம்.

ஆறாத்துயரில் தோய்ந்த-

கணவன்:
S. ஆறுமுகம்

பிள்ளைகள்:
சத்தியபாமா (சுவிஸ்), சத்தியபாலன் (ஜேர்மன்), சத்தியமூர்த்தி (ஜேர்மன்), சரவணபவன் (பரிஸ்), கமலாம்பிகை (கொழும்பு), தேவராணி (ஜேர்மன்), இராஜேஸ்வரன் (சுவிஸ்), காலஞ்சென்ற கணேசலிங்கம். நளினா.

மருமக்கள்:
இந்திரகுமார், றூபி. லக்ஷ்மி, பிறேமா, மது, மாணிக்கவாசகர்.

சகோதரர்கள்:
நாகம்மா (யாழ். போதனா வைத்தியசாலை ஊழியர்), யோகம்மா, நாகரத்தினம்.

பேறாமக்கள்:
சற்குருநாதன், இந்திராணி, பாலகுமாரி (பல்கலைக்கழக 3ஆம் வருட மாணவி), பாலகணேசன், வாசுகி, வாசன், பவதாரணி.

பேரப்பிள்ளைகள்:
காஞ்சனா (கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவி), சுரேக்கா, சபீனா, சபீலா, பிரதீபன், மனோஜா, துஷ்யந்தன், சுகர்ணா, சரண்யா, நிஷாந்தி. நிதர்சன், டனுஷா, டக்ஷன்.

S. இந்திராணி (பெறாமகள்)

பழங்கிணற்றடிப் பிள்ளையார் கோயிலடி,
கலாசாலை றோட்,
திருநெல்வேலி.

[30160]

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்

யாழ்ப்பாணக் கிளைத் தலைமையலுவலகம்
யாழ் கிளை மன்றம்

1994 வருடாந்த பொதுக் கூட்டத்திற்கான அறிவித்தல்

மேற்படி பொதுக்கூட்டம் 29—05—94 (ஞாயிற்றுக்கிழமை) முற்பகல் 9மணிக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

யாழ். கிளையின் ஒவ்வொரு பிரிவிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட 30 அங்கத்துவப் பிரதிநிதிகள் (இவர்களில் யாரும் வரமுடியாதவிடத்து அவர்களுக்காக நியமிக்கப்படும் பிரதிநிதிகள்) மாத்திரமே இக் கூட்டத்தில் பங்குபற்றலாம்.

இவர்கள் 1994க்கான அங்கத்துவப் பணத்தைச் செலுத்தியவர்களாக இருத்தல் வேண்டும். இப்பிரதிநிதிகள் பெயர்களையும், பிரேரணைகளையும் பிரிவுத் தலைவர்/செயலாளர் 01 — 05 — 94க்கு முன்பாக எமக்கு அனுப்பி வைக்கவும்.

- கௌரவ செயலாளர்.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
30-03-1994

[இ-7630]

'தேமதுரத்தமிழோசை உலகமெலாம் பரவும்வகை செய்தல் வேண்டும்'

36 ஆவது ஆண்டு தமிழ் இசை விழா

யாழ்ப்பாணம் அண்ணாமலை இசைத்தமிழ் மன்றம்

பண்டாரக்குளம் மருதவளவு விநாயகர் ஆலய உற்சவத்தை முன்னிட்டு
நடத்தும்

இசைவிழா

இடம்: நல்லூர் பண்டாரக்குளம் மருதவளவு விநாயகர் ஆலய முன்றில்

காலம் 01 04-94 முதல் 15-04-94 வரை

நிகழ்ச்சிகள்

01 - 04 - 1994 வெள்ளிக்கிழமை
முதலாம் நாள் நிகழ்ச்சிகள்

மாலை 7-00 மணி மங்கள இசை

அரியாலையூர்
திரு. க. த. சுப்பிரமணியம்
திரு. த. இராஜேஸ்வரன்]— நாதஸ்வரம்
திரு. க. த. சுந்தரலிங்கம்
செல்வன் க. த. இராஜேந்திரன்]— தவில்

8 00 மணி பட்டமளிப்பு விழா

ஆசியுரைகள்:
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்
(நல்லை ஆதீனம்)
பிரம்மஸ்ரீ கு. குமாரக் குருக்கள்
(பண்டாரக் குளம் விநாயகர் ஆலயம்)

அண்ணாமலை இசைத் தமிழ் மன்றத் தலைவர் சங்கீத பூஷணம் திரு சு. கணபதிப்பிள்ளை (உதவிக் கல்விப் பணிப்பாளர்-சங்கீதம்) அவர்கள் தலைமையில் 36ஆம் ஆண்டுத் தமிழிசை விழாத் தலைவர் இசைப் பேரறிஞர், சங்கீத பூஷணம் திரு V. K குமாரசாமி அவர்களுக்கு "இசையரசு, என்ற பட்டம் வழங்கிப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தல்"

கௌரவ விருந்தினர்கள்:
வைத்திய கலாநிதி திரு. T. கெங்காதரன் அவர்கள்
திரு சி வீ. கே. சிவஞானம் அவர்கள்
(இளைப்பாறிய யாழ்.மாநகரசபை ஆணையாளர்)

சிறப்பு விருந்தினர்:
திரு. புதுவை இரத்தினதுரை அவர்கள்
(பொறுப்பாளர் கலை, பண்பாட்டுக் கழகம்)

பாராட்டுரை:
இசையரசு திரு. M.N. செல்லத்துரை அவர்கள்
இசையரசு திரு. P. சந்திரசேகரம் அவர்கள்

இசைவிழாத் தலைமையுரை:
இசையரசு திரு. V. K. குமாரசாமி அவர்கள்

9 00 — 10-00 மணி
திரு. K. R நடராசா — பாட்டு
திரு. R. S கேசவமூர்த்தி — வயலின்
திரு. S. மகேந்திரன் — மிருதங்கம்
திரு A. செல்வரத்தினம் — கடம்

02 - 04 - 1994 சனிக்கிழமை
இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள்

மாலை 7-00 மணி
அண்ணாமலை இசைக்கல்லூரி மாணவர்கள்]— பாட்டு, மிருதங்கம்

7 30 மணி
திரு அ. புவனேந்திரராசா — புல்லாங்குழல்
திரு. S. பத்மநாதன் — வயலின்
திரு. ப. ரதிரூபன் — மிருதங்கம்

8-15 — 9-30 மணி
N. V. M. நவரத்தினம் — பாட்டு
V K குமாரசாமி — வயலின்
திரு. N. சோமஸ்கந்தசர்மா — மிருதங்கம்
திரு. சதா வேல்மாறன் — கடம்

விழா சிறப்புற வாழ்த்துவோர்:

மகாராணி ரெக்ஸ்ரைல்ஸ்
மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

[இ/7647]

கண்ணைக் கவரும் "றோஜா" பூக்கள் எழிலூட்டும் நேருசி
றோயல் இன்டஸ்றீஸ் றோயல் பேக்கிங் பவுடருக்கு
இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றது

மலரும் புத்தாண்டுக்கான அரிய பொக்கிஷமாக
பெறுமதிமிக்க பரிசாக "நேருசி" வழங்கப்படுகின்றது.

சுவையான கேக் தயாரிப்பதற்கு
மனையியல் ஆசிரியைகளின் இன்றைய சிபார்சு

றோயல் பேக்கிங் பவுடர்

றோயல் இன்டஸ்றீஸ் ஸ்தாபனத்தாரின் "றோயல் கான மழை" நிகழ்ச்சி இலங்கை வானொலியில் சேவை ஒன்றில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 3-45 முதல் 4-00 மணிவரை, ஒலிபரப்பாகி வருகின்றது. உங்கள் தேர்வுகளும் ஒலிபரப்பாக விரும்பினால் இச்சேவையை கேட்டு மகிழுங்கள்.

ரொக்கப் பரிசு: 1000 மட்டுமே

★ சில்லறை வியாபாரிகள் தமது தேவைகளை மொத்த வியாபாரிகளிடம் கேட்டு வாங்குங்கள்

றோயல் இன்டஸ்றீஸ்
பொன்னையா [illegible]
யாழ்ப்பாணம்.

[30171]

சின்னஞ் சிறு விளம்பரம்

விற்பனைக்கு

9H P. என்ஜின் (வாட்டர்) 12'' 10'' இரைண்டர்கள் இல. 7 அவர் செற்றாகவும் அல்லது தனியாகவும் விற்கப்படும். தொடர்பு: செல்லத்துரை கடை, மந்திகை றோட், அல்லையம்பதி, தன்னாலை. (30165)

வாடகைக்கு கொடுக்கப்படும். தரப்பந்தல், கதிரைகள் விற்பனைக்குண்டு. தொடர்பு; மகாலிங்கம், (மினி) 958/47, நாச்சிமார் கோயில், யாழ்ப்பாணம். ஒவன், பொக்ஸ், கிற்றார் ஆகியவையும் விற்பனைக்குண்டு. (7047)

சகல வசதிகளுடன் கூடிய 7 அறைகள் கொண்ட வீடு உடன் விற்பனைக்கு உண்டு காணி 3½ பரப்பு. க. பவளபூஷணம் 99, சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம். (7174)

ஈழத்தமிழர் வரலாறு (கி.பி. 1000 வரை) தொகுதி I கலாநிதி சி. க. சிற்றம்பலம், யாழ் பல்கலைக்கழகம் விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். (சி-7467)

National வீடியோ கமரா, டெக், Hitchi வீடியோ கமரா, மிக்சர் கலர் காட், கட்டில், சாப்பாட்டு மேசை, கதிரைகள், சோக்கேஸ், அலுமாரி, டிரெசிங் ரேபில், குசன் செற்றி குறிஞ்சி மெடிக்கல் அருகில், பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி (30145)

மணிக்கூடு திருத்துதல்

சகல மணிக்கூடுகளும் உத்தரவாதத்துடன் குறைந்த செலவில் திருத்திக் கொடுக்கப்படும். சகல மணிக்கூட்டு பற்றரிகளும் எம்மிடம் உண்டு. உதிரிப்பாகங்களுக்காக மணிக்கூடுகள் வாங்கப்படும். குடும்ப அட்டையுடன் வரவும். ''கஜன்ஸ் வோச் வேக்ஸ்'' 12, புகையிரத நிலைய வீதி, சுன்னாகம் சந்திக்கருகில். (7168)

புறொயிலர் குஞ்சு

பிறிமா புறொயிலர் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. ஓடர் கொடுத்தவர்கள் உடன் பெற்றுக்கொள்ளவும். தேவையானோர் உடன் தொடர்பு கொள்ளவும். 'மல்லிகாபதி', சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (30058)

SPOKEN ENGLISH

ஆரம்பத்தில் இருந்து பட்டப் படிப்பு வரை ஆங்கிலம் கற்பிக்கப்படுகிறது ஆரம்பம்: 02-04-94 V. N. Kandasamy, 87. திருநெல்வேலி றோட், கொக்குவில். (7171)

நாளை ஆரம்பம்

பாலர் ஆசிரியர் பயிற்சி 1994-04-02 சனிக்கிழமை ஆரம்பம்: G. C. E. (O/L) தகுதி. சனி, ஞாயிறு வகுப்பிற்கு வர முடியாதோர் தபால் வழியிலும் பயிலலாம். பாலர் ஆசிரியர் சங்கம், உயர் கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (7173)

ஓவியப் போட்டி

யாழ்ப்பாணம், ஏப். 01 வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம் ஆண்டு ஒன்று முதல் ஆறு வரையான பாடசாலை மாணவர்களுக்கு ஓவியப் போட்டி ஒன்றை கடந்த 19 ஆம் திகதி நடாத்தியது.

லயன் கலாநிதி ஆ'. போர்ட்டர் அனுசரணையுடன் நடைபெற்ற இப்போட்டியில் சிறந்த 12 ஓவியங்களை ஓய்வுபெற்ற ஓவிய ஆசிரியர் திரு. அமிர்தநாதன் தலைமையிலான குழு தெரிவுசெய்தது.

''நாம் உலகில் பறவைகள், தேனீக்கள், மீன்கள், கடல், மிருகங்கள், மரங்கள் சகல உயிர் வாழ்வனவுடனும் சேர்ந்து வாழ்கின்றோம்'' என்பது ஓவியப் போட்டியின் கருப்பொருளாகும்.

வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும் சான்றிதழ்களும் பாடசாலைகளின் அடுத்த தவணை ஆரம்பத்தில் வழங்கப்படும் என அறிவிக்கப்படுகிறது. [a]

B.S.M.S. பட்டதாரிகள் மருத்துவ சங்கம்

அங்குரார்ப்பணக் கூட்டம்

இடம்: சித்த போதனா வைத்தியசாலை, கைதடி
காலம்: 02-04 94 சனிக்கிழமை பி. ப. 1-00 மணி

B. S. M. S. பட்டதாரி மருத்துவர்கள் அனைவரையும் தவறாது சமுகம்தரும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

— அமைப்பாளர்கள்

(30172)

இரண்டாம் ஆண்டு இதய அஞ்சலி

செல்வி துஷாந்தி பஞ்சாட்சரலிங்கம்

அன்னைமடியில்: 17-09-1981
ஆண்டவன் திருவடியில்: 01-04-1992

அன்பான அப்பாவும் அம்மாவும் அருமைச் சகோதரரும்
நன்பான உறவினரும் நலமுடைய நல்லோரும் என்றும்
பாணாங்குள அம்மனின் பூங்காவனத் திருநாளில் துஷாந்தி
உன்னை நினைத்து உருகுகின்றார் உயிர் அணையாய் என வருந்தி!

உங்கள் பிரிவால் துயருறும்;
அப்பா, அம்மா, அக்கா

49, கச்சேரி நல்லூர் வீதி,
மூத்தவிநாயகர் கோவிலடி,
நல்லூர்.

[7172]

ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர். V. K. ஆறுமுகம்

(ஓய்வுபெற்ற பொலீஸ் அத்தியட்சகர்,
முன்னாள் பாதுகாப்பு அத்தியட்சகர்,
மக்கள் வங்கி — வடமாநிலம்)

தோற்றம்: 19 — 08 — 1911
மறைவு: 28 — 03 — 1989

திதி: 01-04-1994

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்,
[illegible]

மீன பவனம்,
தெல்லியடி, அரவெட்டி.

(30127)

பேராதனைப் பல்கலைக்கழக (வெளிவாரி) பட்டப் படிப்புகள்

- ✻ கலைமாணி (B. A.)
- ✻ விஞ்ஞான மாணி (B. Sc.)
  புள்ளி விபரவியல்

க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் 180 புள்ளிகளைப் பெற்றவர்கள் கலை மாணிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம் அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்.

இதுவரை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பதியத் தவறியவர்களுக்கோர் அரிய சந்தர்ப்பம். உடன் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று விண்ணப்பிக்கவும்.

விவரங்களுக்கு;

உதவிப் பதிவாளர்,
பட்டப்படிப்புகள் கல்லூரி,
148/1, ஸ்ரான்லி வீதி.
யாழ்ப்பாணம்.

(சி-7643)

கொக்குவில் மேற்கு மஞ்சவனப்பதி முருகன் ஆலய மகாசபை

அங்கத்தவர்களுக்கான

பொதுக் கூட்டம்

30-04-94 சனிக்கிழமை பிற்பகல் 3-00மணிக்கு நிரந்தர நிர்வாகசபை அமைப்பதற்கு ஒரு கூட்டம் ஆலய மண்டபத்தில் நடைபெறும்.

கொக்குவில் மேற்கில் நிரந்தர குடியிருப்பாளரும் சைவசமயத்தைச் சேர்ந்த 18வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலாரும் மகாசபை அங்கத்தவராக சேரலாம்.

01-04 94 தொடக்கம் 15-04-94 வரை அங்கத்தவர்களுக்கான விண்ணப்பப்படிவங்கள் ஆலய பணிமனையில் விநியோகிக்கப்படும். மேலதிக விவரங்களை ஆலய விளம்பரப்பலகையிலோ அல்லது ஆலயப் பணிமனையிலோ பெற்றுக் கொள்ளலாம்.

- தற்காலிக நிர்வாகசபை,

(30170)

31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 03 — 05 — 1921

மறைவு: 02 — 03 — 1994

திருமதி பராசக்தி இராசகோபால்

தொடர்ந்து வந்த துன்பங்களை துச்சமென மதித்து
தளராது தாங்கி நின்று பிள்ளைகளை வளர்த்து
பேர்சொல்ல வைத்த பெருமை மிகு தாயே!
உற்றநோய் சிகிச்சைக்கென தலைநகரம் சென்றனையே
மீள இங்குவாராது மீளாத்துயில் கொண்டனையே
நின் ஆன்மா சாந்திபெற நிமலன் அடிகளினை
வழுவாது அனுதினமும் மனதாரப் போற்றுகின்றோம்.

ஆன்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்;
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள், உறவினர்கள்.

13/2, தலையாழி ஒழுங்கை,
கலட்டி, யாழ்ப்பாணம்.

(30153)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 09 — 09 — 1919

உதிர்வு: 12 — 04 — 1993

அமரர் கந்தையா தம்பிப்பிள்ளை J. P.

(முன்னாள் கைதடி கிராமசபைத் தலைவர்)

திதி 01 — 04 — 1994

நீங்காத உங்கள் நினைவலையில்
தாக்காது நித்தம் நீந்துகிறோம்
ஓராண்டு கனவாக மறைந்தாலும்
உங்களன்பு நெஞ்சத்தில் மறைந்திடுமா.

— குடும்பத்தினர்.

நீது லீலாவதி வர்த்தகர் களஞ்சியம்,
கைதடிச் சந்தி,
கைதடி.

(30121)

உதயன்
292/2, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்.

தடுத்தமையின் நோக்கம்

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தும் பொருட்டு, இன்று — ஏப்ரல் முதலாம் திகதி — யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்ய இருந்த சபாநாயகர் அல்ஹாஜ் எம். எச். முஹம்மது இங்கு வரமாட்டார். அவர் தமது பயணத்தைப் பிற்போட்டுள்ளதாக அறிவித்திருக்கிறார்.

யாழ்ப்பாண விஜயத்தை ஒத்திப்போடுமாறு ஆலோசனைதெரிவித்த விஜேதுங்கா, அதற்குக் கூறிய காரணமோ சிரிப்புக்குரியது. பாதுகாப்பு மற்றும் பயணக் கஷ்டங்கள் இருப்பதாலும், ஹெலிக்கொப்டர் யாழ்ப்பாணத்தில் தரை இறங்குவதற்கு வசதிப்படாது என்பதாலும் சபாநாயகரின் பயணத்தை ஒத்திப்போடுமாறு கூறினாராம் விஜேதுங்கா!

இந்தக் காரணம் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒன்றல்ல. சபாநாயகரின் சமாதான முயற்சியைத் தடுத்தமைக்கு இது உண்மையான காரணமும் அல்ல.

பாவம் அவர் என்ன செய்ய முடியும்? சர்வ வல்லமையும், அதிகாரமும் கொண்ட ஜனாதிபதியின் விருப்பத்தை மீறி இங்கு வர முடியாது. அவ்வாறு வந்து பேச்சு நடத்திச் சென்றாலும் பிரச்சினையில் சம்பந்தப்பட்ட அடுத்த தரப்பின் — அரசின் — அனுசரணையும், ஆதரவும், பங்களிப்பும் இல்லாமல் சமாதானத்தை உருவாக்கும் முயற்சியில் வெற்றிபெறவும் முடியாது.

ஜனாதிபதியின் ஆலோசனையை மீறி அவர் தமது பயணத்தை மேற்கொள்ளும் பட்சத்தில், அவருக்கு அரசே நஞ்சுத்தனமாகச் சில ஊறுகளை விளைவித்துவிட்டு, விடுதலைப் புலிகளே அதற்குப் பொறுப்பு என்று தட்டை மாற்றிப் பழிபோடவும் முயலலாம் அல்லவா?

யாழ்ப்பாணம் வந்து விடுதலைப் புலிகளுடன் பேசும் சமாதான முயற்சியில் சபாநாயகர் முஹம்மது ஈடுபடவுள்ளார் என்ற தகவல் வெளிவந்த ஆரம்பத்திலேயே, அரசாங்கம் தனக்கு அதில் சம்பந்தமில்லை என்றவாறு விலகி நின்றது. அதாவது அரசு அதனை விரும்பவில்லை என்ற நிலைப்பாடு வெளிப்படுத்தப்பட்டது.

இடையில், அரசாங்கம் பேசுவதானால் விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் மேசைக்கு வரவேண்டும் என்று ஒரு நிபந்தனையும் விதித்தது. இந்த நிபந்தனையும் ஏனையவையும் பேச்சுவார்த்தையைத் தட்டிக் கழிப்பதற்கான வெறும் உத்திகள்.

ஜனாதிபதி விஜேதுங்கா, தமிழர் பிரச்சினையை பேச்சுவார்த்தை மூலம் தீர்ப்பதற்கு விரும்பவில்லை. வெளி உலகத்துக்காக, வெளிப்பேச்சாக அரசியல் தீர்வு குறித்துப் பிரஸ்தாபித்தாலும் விடுதலைப் புலிகள் பலமான நிலையில் நிற்கும்போது பேசுவதை அவர் முற்றாக விரும்பவில்லை.

ஆனால் கிழக்கிலும், தெற்கிலும் நடந்த தேர்தல்களை மனதில் வைத்து கடந்த மூன்று மாதங்களிலும் பேச்சுவார்த்தைகளை விரும்புவது போல அவர் நடித்தார். இப்போது அவை முடிந்து விட்டன.

அதனால் பேச்சுவார்த்தைக்கு முன்னர் விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்துவது என்ற தனது உள்ளார்ந்த எண்ணத்தைச் செயற்படுத்த விரும்புகிறார். அதற்கு முதல் சபாநாயகர் இங்கு வந்து பேசி தனது திட்டத்தைக் கெடுத்து சமாதானத்துக்கு வழிகோலி விட்டால் என்ன செய்வது என்ற அச்சம் விஜேதுங்காவுக்கு! சபாநாயகரின் விஜயத்தை தடுத்து நிறுத்தியமைக்கு அந்த அச்சமே விளைவே காரணம்!

தமிழர்களை அழித்து அவர்களைப் பலவீனப்படுத்துவது என்ற முடிவில் எவ்வித மாற்றமும் இல்லாததாலேயே ஆயுத தளபாடங்களை மேன்மேலும் வாங்கிக்குவிக்க விஜேதுங்கா ஓட்டமும் நடையுமாகச் செயற்படுகிறார். எனவே வடக்கின் மீது ஒரு பெரும் தாக்குதலை நடத்தி, பேரழிவை உண்டாக்கி, தாம் நினைத்ததைச் செய்வதற்காகவே முகம்மதுவின் விஜயத்தை தடுத்துள்ளார்!

சு. கட்சியில் மீண்டும் சேர

அனுராவுக்கு சிறிமா அழைப்பு

கொழும்பு, ஏப். 1

''அனுரா பண்டாரநாயக்காவை மீண்டும் சுதந்திரக் கட்சிக்கு வரும்படி அழைக்கிறேன். ஆனால் அவர் வந்தால் அவரை ஏற்றுக் கொள்வது பற்றி கட்சி தான் முடிவெடுக்கும்''

எதிர்க் கட்சித் தலைவர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா இவ்வாறு கூறியுள்ளார்.

அனுரா பண்டாரநாயக்கா தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டு மீண்டும் ஸ்ரீ.ல. சு. கட்சிக்கு வருவாரானால் அவரது நிலைப்பாடு குறித்து கட்சி முடிவு எடுக்கும்.

தொடர்ந்து அனுரா ஐ.தே. கட்சியில் அங்கம் வகிப்பாராயின் அது குறித்து எனக்கு ஆட்சேபனையில்லை என்றும் அவர் கொழும்பு சிராவஸ்தியில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கூறினார்.

அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக அவரது கட்சிசார்பில் யார் நியமிக்கப்படுவார் என செய்தியாளர் கேட்ட போது அது பற்றி கட்சியே முடிவு எடுக்கும் என திருமதி பண்டாரநாயக்கா தெரிவித்தார். (த-5)

ஜனசக்தி உதவி பொருள்கள் இராணுவ முகாம்களுக்கு

கொழும்பு, ஏப். 1

ஜனசக்தி உதவி பெறுவோர் உட்பட குறைந்த வருமானம் பெறுவோரினால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட 10 லட்சம் ரூபாவுக்கு அதிகமான பொருள்கள் இராணுவ முகாம்களுக்கு அனுப்பி வைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் வடபகுதியில் உள்ள படையினருக்கு ஒரு லொறி பால்மா அனுப்பி வைக்கப்படும் என்றும் உணவு ஜனசக்தி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் வீரசிங்க மல்லிமாராச்சி தெரிவித்தார்.

அங்கவீனமடைந்த படையினரின் விபரங்களைக் கொண்ட நூல் ஒன்றை அச்சிடுவதற்காகத் திரட்டப்பட்ட ஒரு லட்சம் ரூபாவை இராணுவத் தளபதி ஜெரி டி. சில்வாவிடம் கையளிக்கும் வைபவத்தில் பேசிய போது அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

வட பகுதியில் உள்ள இராணுவ முகாம்களுக்குத் தாம் விரைவில் விஜயம் ஒன்றை மேற்கொள்ள விரும்புவதாகவும் அவர் கூறினார். (த-எ)

அண்ணாமலை இசைத்தமிழ் மன்ற ஆண்டு விழா

யாழ்ப்பாணம் ஏப். 01

யாழ்ப்பாணம் அண்ணாமலை இசைத்தமிழ் மன்றத்தின் 36ஆவது ஆண்டு தமிழிசை விழா இன்று வெள்ளிக்கிழமை மாலை 7 மணிக்கு பண்டாரக்குளம் விநாயகர் ஆலய முன்றிலில் ஆரம்பமாகிறது.

15 தினங்கள் நடைபெறவுள்ள இந்த இசைவிழாவின் முதல் நாளான 1ஆம் திகதி வெள்ளிக்கிழமை முது பெரும் வயலின் வித்துவான் சங்கீத பூஷணம் வி. கே. குமாரசாமிக்கு இசையரசு பட்டம் வழங்கப்பட்டு அவர் பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கப்படுவார்.

முதல் நாள் விழாவில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள், பண்டாரக்குளம் விநாயகர் ஆலயக் குருக்கள் பிரம்மஸ்ரீ கு. குமாரக் குருக்கள் ஆகியோரின் ஆசி உரைகள் இடம்பெறும்

மன்றத் தலைவர் சங்கீத பூஷணம் திரு. க. கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் சிறப்பு விருந்தினராக விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரையும், கௌரவ விருந்தினர்களாக வைத்திய கலாநிதி ரீ. கெங்காதரன் முன்னாள் யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் ஆகியோரும் கலந்து கொள்வார்கள்.

திரு எம் என். செல்லத்துரை, திரு. பி. சந்திரசேகரம் ஆகியோர் பாராட்டுரை வழங்குவார்கள்.

திரு. க. ந. சுப்பிரமணியம் குழுவினரின் மங்கள இசையுடன் விழா ஆரம்பமாகும். (இ- 111)

நாடக வரலாற்று கருத்தரங்கு வெள்ளி, சனி நடைபெறும்

யாழ்ப்பாணம், ஏப். 01

குரும்பசிட்டி சன்மார்க்க சபை 'தமிழ்நாட்டின் நாடக வரலாறு' என்னும் தலைப்பிலான கல்வியியற் கருத்தரங்கு ஒன்றை இன்று வெள்ளிக்கிழமையும் நாளை சனிக்கிழமையும் காலை 8-30முதல் மாலை 4-30 மணிவரை யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் நடத்தவுள்ளது.

கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை தலைமை வகிக்கும் கருத்தரங்கில் பேராசிரியர் கா. சிவத்தம்பி, குழந்தை சண்முகலிங்கம், செல்வி இ. ஜெயரஞ்சனி, திரு சி ஜெயசங்கர், செல்வி ந. நவதர்சினி, திரு க. திலைநாதன், திரு. பா. அகிலன், செல்வி மகாலட்சுமி, திரு. ப. இரகுபரன் ஆகியோர் உரையாற்றுவர். (க)

ஹெரத்துக்கு வேறு அமைச்சு வழங்க அரசு ஆலோசனை!

கொழும்பு, ஏப்.1

தற்போது நீதி அமைச்சராக இருக்கும் ஹரோல்ட் ஹெரத்துக்கு வேறு அமைச்சை வழங்குவது பற்றி அரசு தலைமை ஆராய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குளியாப்பிட்டி வழக்கு ஒன்றில் குற்றவாளிகளாகக் காணப்பட்ட இருவருக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு அளித்த விவகாரத்தில் தமக்கு ஆலோசனை வழங்கியவர்கள் உண்மை விவரங்களை தெரிவிக்கவில்லை என்று ஜனாதிபதி விஜேதுங்கா ஆத்திரமடைந்துள்ளார் என்றும் —

அதன் காரணமாகவே நீதி அமைச்சராக இருக்கும் ஹெரத்துக்கு வேறு அமைச்சை வழங்குவது பற்றி அரசுத்தலைமை ஆராய்ந்து வருவதாகவும் —

தென் மாகாணசபைத் தேர்தல் தோல்வியால் எழுந்துள்ள பதற்றநிலை அடங்கியதும், இந்த அமைச்சு மாற்றம் அறிவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

குளியாப்பிட்டி குற்றவாளிகளுக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு அளித்த விவகாரம் சட்ட வல்லுநர்களின் கண்டனத்திற்கு ஆளாகி இருப்பது தெரிந்ததே. (த-6-9)

கிரிக்கெட் சுற்றுப் போட்டி

யாழ் செயலகம் நடத்தும்- 20 ஆவது தேசிய விளையாட்டு விழாவை ஒட்டிய— மாவட்ட ரீதியான விருப்பத்துக்குரிய விளையாட்டுகளின் போட்டித் தொடரில் தோற்பத்து கிரிக்கெட் ஆட்டம் நாளை சனிக்கிழமையும் அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமையும் யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம் பெறும்.

ஆறு பேர் கொண்ட அணிகளுக்கு இடையில் ஐந்து மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக் கொண்டதாக இச் சுற்றுப்போட்டி ஆட்டங்கள் அமையும்.

யாழ்ப்பாணத்தில் உள்ள பன்னிரண்டு பிரபல கிரிக்கெட் கழகங்கள் பங்குபற்றும் இச்சுற்றுப் போட்டி, ''லாவண்யா பல் மூக்குக்கண்ணாடி நிறுவன'' ஆதரவில் நடத்தப்படுகின்றது. (உ)

சனசமூக நிலையத்தில் ஒளி வசதி

யாழ்ப்பாணம், ஏப். 01

தனது எல்லைக்கு உட்பட்ட மாணவர்கள் நிலையத்துக்கு வந்து இரவில் படிப்பதற்கான பெற்றோமக்ஸ் வசதியை நல்லூர் முருகன் சனசமூக நிலையம் ஏற்படுத்தி உள்ளது. (இ)

ஜே. ஆர். நாட்டையே அழித்துவிட்டார் ஆணைக்குழு மூலம் தண்டிக்க வேண்டும்

நாடாளுமன்றில் லக்ஷ்மன் ஜயக்கொடி

கொழும்பு ஏப் 01

ஜே. ஆர். ஜெயவர்த்தனா கண்ணியமற்ற தந்திரங்களால் நாட்டையே அழித்து விட்டார். அவரை ஆணைக்குழு ஒன்றினால் விசாரித்து தண்டிக்க வேண்டும்.

சுதந்திரக் கட்சி எம். பி. லக்ஷ்மன் ஜயக்கொடி அண்மையில் நாடாளுமன்றத்தில் பேசியபோது முன்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த நாட்டில் கடைசியாக 1977 இல் தான் சுதந்திரமான நீதியான தேர்தல் நடந்தது. அரசியலில் தலையிட இராணுவத்தினரை அனுமதிக்க முடியாது. எதிர் காலத்தில் படையினர் அரசாங்கத்தைக் கவிழ்க்கலாம்.

பூநகரி பேரழிவைச் சந்தித்த பின்னர் இராணுவம் தீவிர ராணுவ நடவடிக்கை எதையும் வடக்கு, கிழக்கில் மேற்கொள்ளவில்லை. ஆனையிறவு இராணுவ முகாமின் முன்னணி பாதுகாப்பு நிலைகளை விடுதலைப் புலிகள் தாக்கியுள்ளனர். வடக்கு கிழக்கை தனிநாடாகவே அரசாங்கம் கருதுகிறது.

ஐ தே க கூட்டங்களில் ஹெலிக்கொப்டர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதில் பொலீஸார் ஈடுபட்டுள்ளனர்.

தென்மாகாணசபைத் தேர்தலின் போது படையினரின் வாகனங்களில் சிறைக் கைதிகளும் கொண்டு செல்லப்பட்டனர் என்று மக்கள் கூறுகின்றனர்.

—இவ்வாறு திரு. ஜயக்கொடி தெரிவித்தார். (இ-ஈ)

இழப்புக்களைத் தாங்குகின்ற சக்தியை நாம் சிலுவையிலிருந்து பெறுகிறோம்

இன்று பெரிய வெள்ளி

நாட்களிலே சிறந்த நாள் பெரியவெள்ளி என்றால் யார் நம்புவர்?

இறப்பு என்பது எவருக்கும் ஒரு கொண்டாட்டமாய் அமைவதில்லை. ஆனால் இயேசுவின் மரணம் ஒரு கொண்டாட்டம் என்றால் அதில் என்ன வியப்பு!

வயலிலே நெல்லை விதைக்கும்போது விதை நெல் அழிந்து விடும் என்று கவலைப்படுபவரும் உளரோ? மாறாக துளிர்விட்டு முளைக்கும் நெல்லைக்கண்டு மகிழாத உழவன் யார்? விதைக்கப்பட்ட நெல் மடிந்து போகின்றது. ஆனால் அழிந்துபோன நெல் கதிர்விட்டு புதிய பயிருக்கு உரமாக மாறுகின்றது. ''கோதுமை மணியானது மண்ணில் விழுந்து மடிந்தாலொழிய அது அப்படியே இருக்கும். மடிந்தால் தான் மிகுந்த பலன் அளிக்கும்'' (அருளப்பர் 12:24) இவ்வாறு யேசுவின் சாவு எமக்கு வாழ்வாக மாறியுள்ளது.

இயேசு ஏன் சிலுவையில் சாகவேண்டும் என்ற கேள்வி இன்றும் பல உள்ளங்களில் எழத்தான் செய்கின்றன. சாவை வாழ்வாக்கிய இயேசுவின் சாதனை ஒரு ஆழமான அன்பின் அடையாளமாகும். இறையன்புதான் இயேசுவின் சிலுவைக்கும், வேதனைக்கும், பாடுகளுக்கும், மரணத்துக்கும் அர்த்தமுள்ள பதிலைத் தருகின்றது. அன்பினால் ப[illegible] உதயமாகின்றன. அந்தத் தியாகத்தின் [illegible] இயேசு தன்னுயிரை எமக்காகப் பலியாக்கி[illegible] வெள்ளி இறையன்பையும், பிறரன்பையும் வெளிக்காட்டும் அளப்பரிய நாளாகும்.

''உங்களுக்குள் சக அன்பு வேண்டும் என்றேன்
உயிர் கொடுக்கும் அளவுக்கும் அன்பு வேண்டும்!
தங்கம்பிகாள் 'நண்பனுக்கு உயிர்கொடுத்தல்
தரமான செயலாகும் நானும் உம்மைப்
பலிகமி ா நண்பரெனக் கருதுகின்றேன்
பணிபுரியும் சேவகராய் எண்ண மாட்டேன்
மங்கைமரப் நானும்மைத் தேர்ந்தேன் நீங்கள்
வலியவந்து சேரவில்லை'' என்றார் இயேசு.
(இயேசு காவியம் — கண்ணதாசன், பக்கம் 618)

பெரியவெள்ளி தரும் இன்னொரு முக்கிய படிப்பினை இயேசுவின் நிபந்தனையற்ற கீழ்ப்படிவாகும். துன்பத்தை எவரும் விரும்பி ஏற்பதில்லை. ஆனால் இயேசு துன்பத்தையும் சாவையும் தந்தையின் திருவுளம் என ஏற்றுக்கொண்டார். இன்று கீழ்ப்படிவு என்பது எமக்கு இசைவானதொன்றல்ல. பெற்றோர் பெரியோர் இன்று மதிக்கப்படாத நிலையில் இருக்கின்றனர். எனவே இயேசுவின் கீழ்ப்படிவு இளைஞருக்குத் தந்த சிறந்த பாடப்பினையாகும்.

சமகால நிகழ்வுகளில் நாம் எதிர்கொள்ளும் இழப்புக்கள், துன்பங்கள், சோதனைகள் சாவுகள் அனைத்தையும் [illegible] வையிலிருந்து பெறுகின்றோம். பெரியவெள்ளி சாவை வென்ற இயேசுவின் ஆற்[illegible] பெரியவெள்ளி ஒரு தோல்வியின் நாள் அல்ல, மாறாக வெற்றியின் நாள்.

அருட்திரு, ஜே. நீக்கிலஸ்

பண்டிதர் பவள விழாவும் நூல் வெளியீடும் நாளை

வட்டுக்கோட்டை, ஏப். 1

வட்டுக்கோட்டைத் தொகுதித் தமிழ்ச்சங்கம், செந்தமிழ்ச் செல்வர் பண்டிதர் க. மயில்வாகனனாருக்கு எடுக்கும் பவள விழா நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

வட்டுக்கோட்டை அருள்மிகு வீரபத்திர சிவன் கோவில் மேலை வீதியில் அமைக்கப்பட்டுள்ள முதுதமிழ்ப் புலவர் மு. நல்லதம்பி அரங்கில் பவள விழா நிகழ்ச்சிகள் இடம் பெறும். தமிழ்ச் சங்கத் தலைவர் அருட்புலவர் அ. ஆறுமுகம் விழாவுக்குத் தலைமை வகிப்பார்.

விழா நிகழ்ச்சிகள் நாளை பிற்பகல் 1 30 மணிக்கு விழா நாயகர் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படுவதுடன் ஆரம்பமாகும்.

நல்லைஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் தென்னிந்திய திருச்சபையின் பேராயர் பேரருட்திரு கலாநிதி சு. ஜெபநேசன், மிக்க வைற் நிறுவன முதல்வர் கலாநிதி க. கனகராசா ஆகியோர் ஆசியுரை வழங்குவர்.

வைத்திய கலாநிதி மு. ஸ்ரீராசசேகரம் பண்டிதருக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பார். சித்தாந்த கலாநிதி பண்டிதர் மு. கந்தையா ''புலவர்மணி'' என்ற விருதை வழங்கிக் கௌரவிப்பார்.

பண்டிதரின் பவள விழா மலரை பல்கலைக்கழக விரிவுரையாளர் திருமதி. நாச்சியார் செல்வநாயகம் வெளியிட்டு வைப்பார்.

பண்டிதர் மயில்வாகனனார் எழுதிய ''தமிழ் அமுதம்'' நூலை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சுந்தரம் டிவகலாலா வெளியிட்டு வைப்பார்.

கலாநிதி நா. சுப்பிரமணியன், பண்டிதர் க. சச்சிதானந்தன் ஆகியோர் ''தமிழ் அமுதம்'' நூலின் ஆய்வுரைகளை நிகழ்த்துவர்.

விழா நாயகரைப் பாராட்டி அறிஞர்கள் பலரும் உரை நிகழ்த்துவர். (அ- 161)

வீதிகள் திருத்தம்

தார் பிரச்சினையை சமாளித்து குண்டும் குழியுமாக உள்ள யாழ். மாநகரசபையின் வீதிகளை புனரமைக்கும் முயற்சியில் யாழ் மாநகர சபை முன்மாதிரியாக செயற்பட்டு வருகிறது.

தார் வந்து சேரும் வரை இவ்வீதிகளில் வாகனங்களில் செல்வோர் விழுந்து எழும்புவதை தவிர்க்க இக்குழிகள் சதுரமாக வெட்டி எடுக்கப்பட்டு களிமண் போடப்பட்டு இறுக்கப்படுகிறது.

இவ்வாறு புனரமைக்கப்படும் வீதிகள் மழையில்லாது விட்டால் சுமார் 6 மாதங்கள் வரை நின்றுபிடிக்கும் என நம்பப்படுகிறது (இ-102)

புலிகளின் குரல் வானொலியில்

01-04-1994
வெள்ளி இரவு

★ 8.01 — அன்னை பூபதி நினைவாக சிறப்பு நிகழ்ச்சி- ''பூமி பிளந்தது: புயல் எழுந்தது''
★ 8.10 — காலை மஞ்சரி.
சிறுகதை — ''புதைப்பதும் புதிய உலகம்''
கவிதை — ''கரும்புலி''
★ 8.30 — செய்திகள்
★ 8.40 — அரசியல் அரங்கம் — ''நந்தவனத்திலோர் ஆண்டியாகிவிட்ட டிங்கிரி பண்டா விஜேதுங்க.
★ 8.50 — வாத்திய கானங்கள்.

02-04-1994
சனி காலை

★ 7.02 — மாவீரர் வணக்கம்
★ 7.15 — அன்னை பூபதி நினைவாக சிறப்பு நிகழ்ச்சி ''பூபதி விளைவித்த பூகம்பம்''
★ 7.25 — நீங்கள் கேட்டவை
★ 7.45 — செய்திகள்
★ 7.50 — பத்திரிகைச் செய்திகள்
★ 7.55 நாயகப் பாடல்கள்

விளையாட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப். 1

சுதுமலை தெற்கு ஆனைக்கோட்டை அம்பாள் ச.ச. நிலைய வெள்ளி விழாவை யொட்டி நடைபெற்று வரும் தாச்சி சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 3.45 மணிக்கு நிலைய மைதானத்தில் நடைபெறும் 'பி' பிரிவு ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:

★கைதடி மின்னொளி அணி எதிர் சண்டிலிப்பாய் விரசர் அணி
★பண்டத்தரிப்பு காந்தி அணி எதிர் கைதடி குமரநகர் அணி. (த)

ஆலயங்களில்

நல்லூர் அருள்மிகு பண்டாரக்குளம் பிள்ளையார் தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 16ஆம் திகதி சனிக்கிழமை வைரவர் சாந்தியுடன் நிறைவு பெறும்.

14ஆம் திகதி புதுவருடத் தினத்தன்று தேர்த்திருவிழாவும் 15ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (க-111)

★ ★ ★

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவை தொண்டமானாறு செல்வச் சந்நிதி முருகன் கோயிலில் நடத்தி வரும் வாராந்த நிகழ்ச்சித் தொடரில் நாளை கந்தபுராண கவி அமுதம் என்ற பொருளில் பண்டிதர் ஆர். கே. முருகேசு உரையாற்றுவார். (த-173)

★ ★ ★

அரியாலை புங்கங்குளம் வில்லவபடி ஸ்ரீ நாக பூசணி அம்மன் ஆலய விசேட அபிஷேக விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. ஏப்ரல் மாதம் 7 ஆம் திகதியுடன் விழா நிறைவு பெறும்.

★ ★ ★

வண்ணை சாத்தையபர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோயிலில் இன்று வெள்ளி காலை 6 மணி முதல் மாலை 4 மணி வரை சூரபத்மன் வதை படலம் இடம் பெறும்.

சேமிப்பு வங்கி வெற்றிடங்களும் நிரப்பப்படும்

யாழ்ப்பாணம், ஏப். 1

மக்கள் வங்கி எழுதுநர், தட்டெழுத்தாளர் பதவிகளுக்கான போட்டிப் பரீட்சையில் தோற்றி சித்தியடைந்தோரைக் கொண்டு தேசியசேமிப்பு வங்கியின் யாழ். கிளையில் உள்ள எழுதுநர் வெற்றிடங்களையும் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கான அனுமதியை தேசிய சேமிப்பு வங்கியின் தலைவர் வழங்கியிருப்பதாக யாழ். அரச அதிபர் திரு கா. மாணிக்கவாசகர் கொழும்பிலிருந்து அறிவித்துள்ளார்.

மக்கள் வங்கி எழுதுநர், தட்டெழுத்தாளர் பதவிகளுக்கான போட்டிப் பரீட்சை நாளையும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் இங்கு நடைபெறவிருப்பது தெரிந்ததே (உ-5)

9,10 ஆம் திகதிகள் கடைகள் திறந்திருக்கும்

புதுவருடத் தினத்தை ஒட்டி எதிர்வரும் 9 ஆம், 10 ஆம் திகதிகளில் — சனி, ஞாயிறு தினங்களில் — வர்த்தக நிலையங்களை முழுமையாகத் திறந்து வியாபாரம் செய்யலாம் என அறிவிக்கப்பட்டிருக்கிறது. (உ)

மீனவர்களுக்கான..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டாது என்றும் —

தொடர்ந்து எதுவித அறிவிப்பும் அரசிடமிருந்து கிடைக்காததால் தாங்கள் இந்த முடிவுக்குத் தள்ளப்பட்டதாகவும் —

யாழ். செயலகத் திட்டப் பணிப்பாளர் திரு. எல். சத்தியநாதன் தெரிவித்தார். (உ-8)

ஸ்ரீலங்கா..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உதிரிப்பாகங்கள் இல்லாததால் இரத்மலானை விமான நிலைய கராஜில் பல விமானங்கள் தரித்து நிற்பதாகவும் —

அவற்றுக்கான உதிரிப்பாகங்களை தேடி வெளிநாடுகளுக்கு சென்ற விமானப்படை நிபுணர்கள் உதிரிப்பாகங்களை எடுத்து வந்துள்ளதாகவும் — தெரிவிக்கப்பட்டது

பல நாடுகளிடம் இருந்து கிடைத்த டெண்டர்களின் அடிப்படையில் சரக்கு விமானங்களும் வாடகை அடிப்படையில் கொள்வனவு செய்யப்படவிருக்கின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-க-8

பாதுகாப்புக்கு —

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் சு கவின் எம் பிக்கள் சிலரும் பங்குபற்றினர்.

அமரசிறி தொடங்கொட தலைமையில் ஐவர் கொண்ட அமைச்சரவையும் நியமிக்கப்பட்டது. (உ-எ-6)

கபுக் —

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் குறித்து விரிவான விசாரணை ஒன்று தற்போது நடத்தப்பட்டு வருவதாக, அதிகார வட்டாரங்களை மேற்கோள் காட்டி கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

சம்பந்தப்பட்ட கொண்டர் நிறுவனத்தின் பின்னால் வெளிநாட்டுச் சக்திகள் சில இயங்குவதாக விசாரணையில் தெரிய வந்துள்ளதாகவும் —

இந்த வெளிநாட்டுச் சக்திகள் அரசைப் பலவீனப்படுத்துவதிலும், நாட்டைப் பிரிப்பதிலும் விடுதலைப் புலிகளுக்கு உதவுவதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-எ)

இனம் காக்கும் இளைஞர் நாம்
வனம் காப்போம் வாரீர்

குரும்பசிட்டி

கிராம ஆலயங்களின் நினைவாக விசேட அபிஷேகமும் கூட்டுப் பிரார்த்தனையும்

மேற்படி அபிஷேக ஆராதனைகளும், கூட்டுப் பிரார்த்தனையும் ஏழாலை தெற்கு வசந்தபுரம் ஸ்ரீநாகபூசணி அம்பாள் ஆலயத்தில் எதிர்வரும் 02-04-1994 ஆம் திகதி நடைபெறும்.

காலை 7.30 மணி முதல் 9.00 மணி வரை அபிஷேக நிகழ்ச்சிகளும் அதனைத் தொடர்ந்து சமய சொற்பொழிவுகளும், பண்ணிசை நிகழ்ச்சிகளும், நண்பகல் 12.30 மணிக்கு அம்பாள் திருவீதி உலா வருதலும், அன்னதான நிகழ்ச்சிகளும் இடம்பெறும். இப் பிரார்த்தனை நிகழ்ச்சியில் குரும்பசிட்டி மக்களை கலந்துகொள்ளுமாறு அழைக்கிறோம்.

வளர்மதி சனசமூக நிலையம்

[சி/7652]

பட்டமளிப்பும் பொன்னாடை போர்த்தலும்

இசையரசு

திரு. V. K. குமாரசாமி அவர்கள்

யாழ்ப்பாணம் அண்ணாமலை இசைத்தமிழ் மன்றத்தின் 86ஆவது ஆண்டு தமிழ்இசை விழாவில் இந்நாட்டின் முதுபெருங்கலைஞர் இசைப் பேரறிஞர், சங்கீத பூஷணம் திரு V. K. குமாரசாமி அவர்கள் "இசை அரசு" பட்டம் சூட்டி பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படுகிறார்கள்.

இவர் கரம்பன் மேற்கு ஊர்காவற்றுறையைச் சேர்ந்த கோவினாம்பிள்ளை - வள்ளியம்மை தம்பதிகளுக்கு மூத்த புதல்வனாய் 1925ஆம் ஆண்டு மார்ச் மாதம் 9ஆம் திகதி அவதரித்தார்.

ஊர்காவற்றுறை சென். அந்தோனியார் கல்லூரியில் ஆரம்ப நாற்கல்வியைக் கற்ற இவர் தனது மாமனார் வைத்திலிங்கம் அவர்களிடம் இசைப் பயிற்சியை ஆரம்பித்தார். பின் 1940ஆம் ஆண்டு தமிழகம் சென்று வந்திரா இருப்பு எனும் ஊரைச் சேர்ந்த தோடி சாமா ஐயங்கார் அவர்களிடம் வாய்ப்பாட்டுப் பயிற்சியை ஆரம்பித்தார். தொடர்ந்து 1942இல் சங்கீத கலாநிதி கும்பகோணம் ஸ்ரீ இராஜமாணிக்கம்பிள்ளை அவர்களிடம் வயலின் பயிற்சியை மேற்கொண்டார். 1945இல் அப்பயிற்சியை பூர்த்தி செய்து அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இணைந்து 'சங்கீத பூஷணம்' பட்டம் பெற்றார்.

1949இல் தாய்நாடு திரும்பிய இவர் கொழும்பில் சைவ மங்கையர் கழகம், இசைக்கலை மன்றம் ஆகிய நிறுவனங்களில் இசையாசிரியாராகப் பணியாற்றத் தொடங்கினார். 1952இல் இலங்கை வானொலியின் தமிழ்ப் பிரிவு வாத்தியக் குழுவின் உபதலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இவர் 1954இல் தன் வாழ்க்கைத் துணைவியாய் புவனசுந்தரி அவர்களை ஏற்றுக் கொண்டார்.

1959 இல் இசை ஆசிரியராக அரச சேவையில் இணைந்த இவர் பல கல்லூரிகளில் பணியாற்றி 1985இல் ஓய்வு பெற்றார். 1976ஆம் ஆண்டு முதல் யாழ் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப் பிரிவில் பகுதி நேர போதனாசிரியராய் இணைந்து இன்று வரை பணியாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

இவர் தமிழகத்திலிருந்து இங்கு வருகைதந்த திரு. ஏ. கே. சி நடராஜன் (கிளாரினெட்), ஸ்ரீமதி என். சே. ஸி. அம்மையார் (புல்லாங்குழல்) கல்யாண கிருஷ்ண பாகவதர் (வீணை), மதுரை எஸ். சோமசுந்தரம் T. K. கோவிந்தராவ், கல்யாணராமன், T. K. ரங்காச்சாரி, T. M. தியாகராஜன், மகாராஜபுரம் சந்தானம், ஸ்ரீமதி மணி கிருஷ்ணசாமி ஆகியோருக்குப் பக்கவாத்தியம் இசைத்துப் பெருமை பெற்றவர். ஈழத்திலும் இவர் பக்கவாத்தியம் வாசிக்காத கலைஞர்கள் இல்லையென்றே கூறலாம்.

சுமார் 50 ஆண்டுகளாக இசையுலகில் ஈடுபட்டு சுமார் 5 000 கச்சேரிகளுக்கு மேல் வாசித்த இவர் அடக்கத்தோடும், பண்போடும், மற்றைய கலைஞர்களை ஊக்குவித்துப் பணியாற்றியவர். மரபு தவறாத இவரது இசைப்பாணி பலராலும் பாராட்டப்படும் ஒன்று. தன் குருவை எல்லையில்லா பக்தியோடு வணங்கி வரும் இவர் பல இளங்கலைஞர்களை இன்றுவரை ஊக்குவித்து வருவது குறிப்பிடத்தக்கது.

இப் பெருமகனுக்கு எமது யாழ்ப்பாணம் அண்ணாமலை இசைத்தமிழ் மன்றம் இவ்வாண்டின் "இசையரசு" பட்டத்தினை வழங்கி கௌரவிக்க வாய்ப்புக் கிடைத்தமையையிட்டுப் பெருமகிழ்வெய்துகிறது.

வாழ்க அவர் பணியென வாழ்த்தி
வணங்குகின்றோம்.

சு. கணபதிப்பிள்ளை,
தலைவர்.

ச. பாலசிங்கம்,
செயலாளர்.

(சி-7648)

மருந்தாளர் பயிற்சி நெறி

இலவச சித்த ஆயுர்வேத வைத்தியசாலைகளில் கடமை புரியும் மருந்தாளர்களுக்கான போதனா பயிற்சி நெறி இன்றும், நாளையும் யாழ்ப்பாணத்தில் உள்ள சங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ள சித்த ஆயுர்வேத வைத்தியப் பிரிவுகளைச் சேர்ந்த சுமார் 35க்கும் மேற்பட்ட மருந்தாளர்களைச் சேர்ந்தவர்கள் இதில் கலந்து கொண்டு பயிற்சி பெறுவர். (அ-30)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் 1993/94 கல்வியாண்டிற்கு

பின்வரும் கற்கை நெறிகளுக்கு வெளிநிலைத் தேர்வு நாடியாக பதிவு செய்ய விருப்புடைய தகைமை பெற்றவர்களிடம் இருந்து 1994 ஏப்ரல் 4ஆம் திகதி தொடக்கம் ஜூன் 30ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்படும்.

1. வர்த்தக முதற் கற்கை நெறி
2. கலை முதற் கற்கை நெறி
3. பொதுக் கலைமாணி பகுதி I
4. சிறப்பு கலைமாணி பகுதி I
5. வர்த்தக மாணி பகுதி I

பின்வரும் பாடங்களில் மாத்திரம் சிறப்புக் கலைமாணி கற்கைநெறிக்குப் பதிவு செய்து கொள்ளலாம். (இந்துநாகரிகம், வரலாறு, புவியியல், பொருளியல், மெய்யியல், அரசறிவியல், தமிழ், நுண்கலை, நாடகமும் அரங்கியலும், சமஸ்கிருதம், கிறிஸ்தவ நாகரிகம்).

விண்ணப்பப் படிவங்களுக்கு உரிய விவரங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் வெளிநிலைப் பதிவு, தேர்வு அலுவலகத்தில் இருந்து நேரடியாகவோ தபால் மூலமாகவோ 1994 ஏப்ரல் 4ஆம் திகதி தொடக்கம் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பபடிவத்தையும் பாடத்திட்டத்தின் பிரதியையும் நேரடியாக பெற விரும்புவோர் யாழ் பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கியில் 50/- ரூபாய் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டை சமர்ப்பித்தல் வேண்டும். தபால் மூலம் இவற்றை பெறவிரும்புவோர் யாழ் பல்கலைக்கழகத்தின் நிதியாளருக்கு எழுதப்பட்ட 50/ ரூபா காசுக்கட்டளை/ தபால் கட்டளையுடன் சுயமுகவரியிட்டு ரூபா 12/ பெறுமதியுடைய முத்திரை பொட்டப்பட்ட 28 x 20 செ. மீ. அளவுடைய தபால் உறையினையும் அனுப்புதல் வேண்டும்.

1992/93 கல்வியாண்டிற்காக ஏற்கனவே பதிவு செய்துள்ளோருக்கு இவ் அறிவித்தல் ஏற்புடையதல்ல.

— பதிவாளர்.

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்.

(சி-7646)

தேவை

நல்ல நிலையில் உள்ள 12 வோல்ற் அல்லது 24 வோல்ற் பற்றரி சார்ஜர் உடன் தேவை.

தொடர்பு:
உதயன்
பணிமனை,
நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-7650)

பரீட்சை குறித்து விவரமில்லை

பேராதனைப் பல்கலைக்கழக கலைமாணி வெளிவாரிப் பட்டப் பரீட்சை எதிர்வரும் 9 ஆம் திகதி நடைபெறவுள்ளது என யாழ். அரச அதிபர் கொழும்பில் இருந்து செயலகத்துக்கு வானொலிச் செய்தி ஒன்றை நேற்று அனுப்பியுள்ளார்.

அந்தப் பரீட்சை தொடர்பான மேலதிக விவரங்கள் எதனையும் அந்தச் செய்தியில் அவர் குறிப்பிடவில்லை. பரீட்சை எங்கு நடைபெறும் என்ற விவரம் கூட அந்த வானொலிச் செய்தியில் குறிப்பிடப்படவில்லை. (அ-9)

மீண்டும் 'ஹெந்தல'

'ஹெந்தல' கப்பல் மீண்டும் யாழ். மாவட்டத்துக்கான உணவுப் பொருள்கள் எடுத்து வரும் பணியில் ஈடுபடவிருக்கிறது.

யாழ். மாவட்டத்துக்கான உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை ஏற்றி வரும் பணியில் ஈடுபட்டுள்ள 'வாதுவ', 'கோமாரி', 'றுகுணு' 'மாஹோ' கப்பல்களுக்கு மேலதிகமாக 'ஹெந்தல' கப்பல் சேவையில் ஈடுபட விருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்துக்கான உணவுப் பொருள்களை கடந்த மாதங்களில் எடுத்து வந்த இக்கப்பல் வடக்கிற்கான சேவையைத் தற்காலிகமாக நிறுத்தியிருந்தது தெரிந்ததே. (உ-8)

பல்கலை....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவ்விவகாரம் குறித்து எதிர்வரும் திங்கட்கிழமை தமது பதிலைத் தருவதாக பீடாதிபதி மாணவர் பிரதிநிதிகளிடம் தெரிவித்தார் என்று தெரியவந்தது.

பீடாதிபதியின் பதில் குறித்தும் —

அடுத்து எடுக்க வேண்டிய நடவடிக்கை குறித்தும் —

ஆராய விஞ்ஞானபீட மாணவர்கள் திங்கள் நண்பகல் கூடவிருக்கின்றனர்.

அஷ்ரப்....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெறப்போவதில்லை என்று ஜனாப் அஷ்ரப் நாடளுமன்றச் செயலாளர் நிஹால் செனவிரத்தினாவுக்கு அறிவித்திருக்கிறார். (இ-எ)

யுத்தத்தை.....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உருப்படியான திட்டங்களை திட்டி மக்கள் முன்வைத்து செயற்படவேண்டிய நிர்ப்பந்த நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது.

தென்மாகாணத் தேர்தல் பிரசாரங்களின்போது, அத்தேர்தலில் தமது கட்சியின் வெற்றியில் பூரண நம்பிக்கை வைத்திருந்த ஜனாதிபதி டி. பி விஜேதுங்க தேர்தல் முடிந்ததும் விடுதலைப் புலிகளை ஒழிக்கும் நடவடிக்கை தீவிரமாக்கப்படும் என்றும், இணைப்பைப் பிரிப்பதற்கான சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படும் என்றும் முன்னர் அறிவித்திருந்தார்.

மே மாதத்தில் சர்வஜன வாக்கெடுப்பை நடத்தும் உத்தேசம் அவருக்கு அப்போது இருந்தது.

இப்பொழுது தேர்தல் முடிவடைந்துவிட்டது; எதிர்பார்த்த வெற்றிகிட்டவில்லை. அதனால் தமது முன்னைய நிலைப்பாட்டை மாற்றவேண்டிய நிலைக்கு டி. பி. விஜேதுங்க தள்ளப்பட்டிருக்கிறார்.

இந்தக் குறுகிய எட்டுமாத காலத்தில் நாட்டில் புதிய அபிவிருத்தியை, செயற்திட்டங்களை அவர் காட்ட வேண்டுமானால் அதற்குப் பெருமளவு நிதி தேவை. யுத்தத்தை பெருத்த எடுப்பில் நடத்திக்கொண்டு மேலதிக நிதியைத் திரட்டுவது சாத்தியமில்லை.

எனவே யுத்த விடயத்தில் தீவிரத்தைக் கணிசமாக குறைத்து தணித்துப் போக வேண்டிய கட்டாயத்துக்கு விஜேதுங்க தள்ளப்பட்டுள்ளார்

சீனாவிடமிருந்து 75 கோடி ரூபாவுக்கு நான்கு யுத்தக் கப்பல்களை வாங்கும் திட்டம் இடையில் கைவிட வேண்டிய நிலைக்கு அரசு தள்ளப்பட்டதும் இக்காரணத்தினாலேயாகும்.

இதேசமயம்—

இவ்வார இறுதியில் நடைபெறும் ஐ. தே. கவின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்திலும் செயற்குழுக் கூட்டத்திலும் அரசின் நிலைப்பாடு [illegible] ப்படும் என்றும் விஜய [illegible] வித்தன. (உ-5)

கடந்த இரு நாட்களில் ஐவர் செப்ரிசீமியாவுக்கு பலி!

யாழ்ப்பாணம், ஏப் 1

செப்ரிசீமியா மற்றும் மலேரியா ஆகிய நோய்களின் தாக்கத்தினால் யாழ். ஆஸ்பத்திரியில் கடந்த இரண்டு தினங்களில் மட்டும் ஐவர் உயிரிழந்தனர்.

செப்ரிசீமியாவினால் தம்பசிட்டியை சேர்ந்த கணேசமூர்த்தி பார்த்திபன் (வயது8) வரணி வடக்கை சேர்ந்த முருகேசு ஜெயவீரசிங்கம் (வயது 60) நல்லூரை சேர்ந்த நாரதன் (வயது 40) ஆகியோரும் —

மலேரியாவினால் உரும்பிராயைச் சேர்ந்த இரத்தினம் செல்லத்துரை (3 மாதம்) பண்டிதர் குடியிருப்பை சேர்ந்த அக்னஸ் மேரி ஜோசப்பினா (வயது 35) ஆகியோரும் உயிரிழந்தனர். (த-15)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

MBBS பரீட்சையில் சித்தியடைந்தவர்களிடமிருந்து அல்லது மார்ச் 1994 இல் இறுதி MBBS பரீட்சைக்கு தோற்றியவர்களிடமிருந்து மருத்துவ பீடத்தின் பின்வரும் துறைகளிற்கான தற்காலிக செய்முறைக் காட்டுநர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன:

உடலமைப்பியல்
உடற்றொழிலியல்
சமூக மருத்துவம்
மருந்தியல்
சட்ட மருத்துவம்
நோயியல் (நுண்ணுயிரியலும் ஒட்டுண்ணியியலும் உட்பட)
மனநோயியல்
அறுவை மருத்துவம்
மருத்துவம்
குழந்தை மருத்துவம்

சம்பள அளவுத்திட்டம்:

ரூபா **4420**/- நிலையானது (மாதமொன்றிற்கு)

பரீட்சைப் பெறுபேறுகளிற்காக காத்திருப்போர் ரூபா **4100**/- நிலையானது (மாதமொன்றிற்கு) சம்பளத்தில் வைக்கப்படுவர்.

குறிப்பு:

இத்துடன்

அ) 1993 மே 12 ஆம் தேதிய 9/93 இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையில் ஏற்பாடுகளுக்கு ஏற்ப மாதாந்தப் படியாக ரூபா 600/- செலுத்தப்படும்.

ஆ) 1994 டிசெம்பர் 31ஆம் தேதி வரை நிலுவையிலுள்ள வேலைகளை நிறைவேற்றும் படியாக மேற்குறித்த சம்பளத்தில் 25 சதவீதத்திற்குச் சமமான தொகை செலுத்தப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி: 1994 — 04 — 11 ஆகும்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கிக் கிளையில் அல்லது பல்கலைக்கழக நிதிக்கிளையில் ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்கும் ரூபா 20/- செலுத்திய பின்னர் இப் பல்கலைக்கழகத்தின் தாபனக் கிளைச் சிரேஷ்ட உதவிப் பணிப்பாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய படிவங்களில் மாத்திரம் விண்ணப்பங்கள் செய்யப்படவேண்டும்.

தபால் மூலம் படிவங்களையும் விவரங்களையும் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர்/நிதியாளர் பெயரில் பெறப்பட்ட ரூபா 20/- பெறுமதியான காசுக்கட்டளை/தபாற்கட்டளையுடன் சுயமுகவரியிட்டு 1/- ரூபா முத்திரையொட்டப்பட்ட 23 X 10 ச. மீ. அளவுடைய கடித உறையை அனுப்புதல் வேண்டும்.

அரசாங்க திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளின் விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் அனுப்புதல் வேண்டும்.

— பதிவாளர்

யாழ்ப்பாணப்
பல்கலைக் கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1994 - 03 - 25.

(சி-7645)

கலைஞர் விவரம் திரட்டப்படுகிறது

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள 25 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் கிராம உத்தியோகத்தர்களினால் சிற்பக்கலை, ஓவியக்கலை, நாட்டியம், நாடகம், சங்கீதம் சிறுகதை, பத்திரிகைத்துறை போன்ற துறைகளில் ஈடுபட்டுள்ள கலைஞர்களின் விவரங்கள் திரட்டப்படுகின்றன. (இ-175)

முதலாவது பிறந்த நாள் வாழ்த்து

01 - 04 - 1994

செல்வன் தியாகராஜா கேசவன்

மல்லாகம் பழம் பிள்ளையார் வீதியில் வசிக்கும் தியாகராஜா—வாணி தம்பதிகளின் செல்வப் புதல்வன் கேசவன் தனது முதலாவது பிறந்த நாளை இன்று குதூகலமாகக் கொண்டாடுகின்றார்.

இவரை லிபியாவில் இருக்கும் அப்பா, அம்மா, அக்காமார். பெரியப்பா குடும்பத்தினர், மாமாமார், மாமிமார், மச்சாள்மார், மச்சான்மார் மற்றும் உற்றார், உறவினர்கள் பல்கலையும் கற்று, பார்போற்ற வாழ்க என வாழ்த்துகின்றார்கள்.

திருமதி வாணி தியாகராஜா.
(செல்வி)

பழம் பிள்ளையார் வீதி,
மல்லாகம்.

(30176)

மரண அறிவித்தல்கள்

அண்ணாமலை கந்தப்பு பூரணம்

காரைநகர் சத்தம்புளியடியை பிறப்பிடமாகக் கொண்டவரும் இல 17 பிரம்படி லேன் கொக்குவிலை வசிப்பிடமாக கொண்டவரும் காலஞ்சென்ற முன்னாள் பொலநறுவை பிரபல வர்த்தகர் கந்தையாபிள்ளையின் (கந்தப்பு) அன்பு மனைவி பூரணம் 31 - 03 - 1994 அன்று இறைவனடி சேர்ந்தார். இவர் தில்லைநாதன் (கிளிநொச்சி), விசுவலிங்கம் (தேவராணி - ஸ்ரோர்ஸ் கொச்சிக்கடை), செல்வரத்தினம் (செல்வம்ஸ் நெடுங்கேணி), உமாதேவி, துரைசிங்கம் (A. K. T நெடுங்கேணி), தேவராணி, ஆகியோரின் தாயாரும், நவரத்தினபூவதி, செல்வராணி, பத்துமாதேவி, கந்தசாமி (M. L. T. போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்), நடராசா (காரைப நோ. கூ. சங்கம்), கனகாதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் சமக்கிரியை இன்று 1 - 04 - 1994 காலை 9 மணிக்கு நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செல்வரத்தினம்
(மகன்)

இல. 17,
பிரம்படி லேன்,
கொக்குவில்.

(30177)

வீரகத்திப்பிள்ளை தம்பிஐயா

(மெக்கானிக்)

கல்வியங்காட்டைச் சேர்ந்த வீரகத்திப்பிள்ளை தம்பிஐயா (மெக்கானிக்) 30-3-94 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் வீரகத்திப்பிள்ளை - அன்னப்பிள்ளை ஆகியோரின் மகனும், சரோஜினிதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சர்வேஸ்வரன், கேதீஸ்வரன், கபாலீஸ்வரன், ஜெகதீஸ்வரன், மகேஸ்வரன், சுந்தரேஸ்வரன், கமலேஸ்வரி, யசோதா ஆகியோரின் அன்புத் தந்தையும், ராஜேஸ்வரன், ஆனந்தராஜா ஆகியோரின் அன்பு மாமனாரும், பற்பநாதன், தனபாலசிங்கம், பாலசுப்பிரமணியம், யோகேஸ்வரன், மகேஸ்வரி, யோகேஸ்வரி, வசந்தகுமாரி ஆகியோரின் மைத்துனரும், அன்னலிங்கம், காலஞ்சென்ற செல்லத்துரை, இராஜதுரை, வேலாயுதம், கனகசுந்தரம், யோகநாதன் ஆகியோரின் சகோதரரும், துஸ்யந்தி, கிர்சன், தேவி, வரன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வை. இராஜேஸ்வரன்
(மருமகன்)

(30184)

கண்மணி சபாரத்தினம்

புங்குடுதீவு 2 ஆம் வட்டாரம் ஆஸ்பத்திரியடியைச் சேர்ந்த காலஞ்சென்ற சபாரத்தினத்தின் (ஓடலி) மனைவி கண்மணி சபாரத்தினம் நேற்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சந்திரதாசன், இரத்தினமணி, சிவநேசன் (நேசன் கடை திருநெல்வேலி), பொன்மணி, சந்திரபாலன் (புங்குடுதீவு மகா வித்தியாலயம்), தவபாலன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:-
ச. நேசன்
(மகன்)

நேசன் கடை,
ஆடியபாதம் வீதி,
வேணியடி,
திருநெல்வேலி.

(30518)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெ[illegible] யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில 01 - 04 - [illegible] அச்சிட்டு வெளியிடப்பெற்றது.